# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

**Vol. II Issue 5 August 2012**


இம்மாத மலரில்....

பொருளடக்கம்

பக்கம்


லைப் டிவைன் ... 2

இம்மாதச் செய்தி ... 18

சாவித்ரி ... 19

யோக வாழ்க்கை விளக்கம் VI ... 21

பூரணயோகம் - முதல் வாயில்கள் ... 26

லைப் டிவைன் - கருத்து ... 29

அஜெண்டா ... 31

அன்பர்களும் அன்றாட வாழ்க்கை நெறிமுறைகளும் ... 34

அன்பர் கடிதம் ... 40

வசந்தமே வருக! ... 50

Infinityயினுடைய ஆற்றல் (பாகம் 1) ... 61


❀❀❀

கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.


வருடச் சந்தா ரூ.60/-
தனிப் பிரதி ரூ.5/-


## ஜீவியத்தின் ஓசை

**உலகம் இதுவரை மறுத்ததை இன்று தடையின்றி வழங்கு-கிறது.**

**செல்வத்தை மனிதன் தனக்குத் தானே தடை செய்து கொண்டான்.**

**முடிந்ததை முழுமையாக, பூரணமாக, சிறப்பாக, அழகுற முடித்தால் முடியாதது தானே முடியும்.**

**தவமிருந்து பெற்றதைக் கண்டு மிரள்வது மனித முயற்சியின் பாங்கு.**

**தடையற்ற முன்னேற்றம் எத்துறைக்குமுண்டு. தடயம் தெரிய வேண்டியது முக்கியம்.**

**பெரிய காரியத்தில் திரு-வுள்ளம் பலிக்க அந்த நேரம் கைமேலுள்ள சிறிய காரியத்-தில் சோதனை செய்யலாம்.**

# லைப் டிவைன்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

## XXIII. The Double Soul In Man

Delight of Existence has relations to the world. *Page 222*
*Para 7*

We have seen the character of it.
It has no absoluteness.
Or it has no essential validity.
Our standards are of pleasure, pain and indifference.
They are entirely determined by our subjectivity.
It is the subjectivity of the receiving consciousness.
The degree of that pleasure or pain can be varied.
It can be heightened to a maximum.
Or depressed to a minimum.
Or effaced entirely in its apparent nature.
Pleasure can become pain.
Or pain pleasure.
They have a secret reality.
There they are the same.



## 23. மனிதனுள் இரட்டை ஆத்மா

ஜீவனின் ஆனந்தம் உலகுடன் தொடர்புள்ளது.

அதன் சுபாவத்தை நாம் ஆராய்ந்தோம்.
அதற்கு பிரம்ம அம்சமில்லை.
அதற்கு அடிப்படையாக விஷயமில்லை.
நாம் சந்தோஷம், வலி, பாராமுகத்தால் அவற்றை அறிகிறோம்.
நம் நினைவே அதற்குச் சட்டம்.
பெறுபவரின் நினைவே அதை நிர்ணயிக்கும்.
வலியோ, சந்தோஷமோ அளவில் மாறக் கூடியது.
உச்ச கட்டத்திற்கு உயர்த்தலாம்.
குறைந்தபட்சமாகவுமாக்கலாம்.
அதன் தோற்றத்தை முழுவதும் அழிக்கலாம்.
சந்தோஷம் வலியாக மாறலாம்.
வலி சந்தோஷமாக மாறலாம்.
அவற்றிற்கு இரகஸ்யமான சத்தியம் உண்டு.
அங்கு அவை ஒன்றே.

The same thing is differently reproduced.
It is so in sensations and emotions.
Indifference is inattention of the surface.
It is desire-soul in its mind.
Sensations, emotions, cravings are indifferent.
They are indifferent to the rasa of things.
Or it is its incapacity to receive and respond.
Or its driving and crushing down of pleasure and pain by the will.
It is crushed into the neutral trait of unacceptance.
What happens in all these cases.
Either there is a positive refusal.
Or a negative unreadiness.
Or an incapacity to render positively.
Or in any way represent on the surface.
It is something that is yet subliminally active.

We have psychologically observed. *Page 222*
We have experimented. *Para 8*
We see the subliminal mind receives.
It remembers.
They are what the surface mind ignored.
They are the touches of things.
Similarly the subliminal soul responds.
It responds to the rasa.
It is the essence in experience.
They are the things rejected by the surface desire-soul.



ஒரே விஷயம் மாறாக வெளிவருகிறது.
உணர்ச்சியிலும் உடலிலும் அவை அப்படித் தோன்றுகின்றன.
மேல்மனம் கவனிக்காதது புறக்கணிப்பு.
மனத்தின் ஆசையது.
ஆர்வம், உணர்ச்சி வலியைக் கவனிக்கவில்லை.
ரஸத்தைக் கவனிக்கவில்லை.
அதனால் பெற்று அனுபவிக்க இயலவில்லை.
அல்லது மனம் வலி சந்தோஷத்தை விரட்டி அழிக்கிறது.

அல்லது அவற்றை நசுக்கி வலியை உணராமல் செய்கிறது.
இங்கெல்லாம் என்ன நடக்கிறது.
ஒன்று தீர்மானமாக வலியை மறுக்கின்றது.
அல்லது வலியை உணர முடியாமல் போகிறது.
அல்லது வலியாக மாற்றும் திறனில்லை.
அல்லது மேல்மனம் எவ்வகையாகவும் உணர முடியாத நிலை.
இது அடி மனத்தில் தெளிவாக உணரப்படுவது.

நாம் இப்பொழுது மனத்தைக் கவனித்தோம்.
இங்குச் சோதனை செய்தோம்.
அடிமனம் ஏற்பதைக் காண்கிறோம்.
ஏற்றதை நினைவு வைத்திருக்கிறது.
இவை மேல்மனத்தால் புறக்கணிக்கப்பட்டவை.
அவை பொருள்களின் ஸ்பர்சம்.
இதேபோல் அடிமன ஆத்மா ஏற்பதுண்டு.
அது ரஸத்தை அப்படி ஏற்கிறது.
ரஸம் அனுபவ சாரம்.
மேல்மன ஆசையின் ஆன்மா மறுத்தவை இவை.

It is by distaste that it refused.
Or ignored by neutral unacceptance.
We live in our surface existence.
We need Self-Knowledge.
For that we must go behind the surface.
It is the result of selective outer experience.
It is an imperfect sounding-board.
It is hasty incompetence.
We are very great.
It is a translation of a little of us.
It is fragmentary.
We must go behind this.
Send down our plummet into the subconscient.
Open ourselves to the superconscient.
Thus we can know our relation to our surface being.
Our existence moves between these three things.
It finds the totality in them.
The superconscient in us is one with the self and soul of the world.
It is not governed by any phenomenal diversity.
It possesses the truth of things.
It possesses the delight of things in their plenitude.
There is the so called subconscient.
In that luminous head of itself is subliminal.
It is not a true possessor.
It is an instrument of experience.
It is not practically one with the soul of the world.



வெறுப்பால் மறுத்தவை அவை.
நடுநிலையிலிருந்து ஏற்க முடியாமல் மறுக்கப்பட்டவை அவை.
நாம் மேல்மன வாழ்வை வாழ்கிறோம்.
நமக்குச் சுய ஞானம் தேவை.
மேல்மனத்திற்குப் பின்னால் போனால் சுயஞானம் வரும்.
பொறுக்கி எடுத்த அனுபவங்களாலானது மேல்மனம்.
குறையான சோதனை செய்யுமிடம் அது.
அவசரமான திறமையற்ற மனம் அது.
நம் வாழ்வு பெரியது.
சிறிதளவு அதில் பிரதிபலிக்கும்.
அது சிதைவுற்றது.
நாம் இதன் பின்னால் போக வேண்டும்.
நாம் ஆழ்மனத்துள் நங்கூரம் பாய்ச்ச வேண்டும்.
பரமாத்மாவை நாட வேண்டும்.
அவ்வழி மேல்மனத் தொடர்பை அறியலாம்.
இம்மூன்றிடையே நம் வாழ்வு உலவுகிறது.
இவற்றுள் முழுமையைக் காண்கிறது.
நம்முள் உள்ள பரமாத்மா உலகத்தின் ஆத்மா, பிரம்மத்துடன் ஒன்றானது.
தோற்றத்தின் வேறுபாடுகட்குட்பட்டதல்ல அது.
சத்தியம் அதனுடையது.
பொருள்களின் ஆனந்தத்தை அது அபரிமிதமாகப் பெற்றுள்ளது.
ஆழ்மனம் எனப்படுவதுண்டு.
ஒளிமயமான அதன் முடி அடிமனம்.
அது உண்மையான ஞானம் உடையதல்ல.
அது அனுபவம் பெறும் கருவி.
உலகத்தின் ஆத்மாவுடன் அது ஒன்றுபட்டதல்ல.

Nor is it so with the self of the world.
It is open to it through its world-experience.
The subliminal soul is conscious inwardly.
It is conscious of the rasa of things.
It has an equal delight in all contacts.
It is conscious of the values of the desire soul.
It is conscious of its standard.
It receives on its own surface corresponding touches.
They are touches of pleasure, pain, indifference.
It takes an equal delight in all.
The real soul is inside.
It takes joy in all experiences.
Gathers from them strength, pleasure, knowledge.

Grows by it in its store and plenty.
The desire mind shrinks.
The real soul compels it to bear it.

It compels it to seek what is painful.
It compels it to find pleasure in it.
It compels to reject what is pleasant.
It compels to modify or reverse its values.
It equalises things in indifference.
It equalises in joy.
It is the joy of variety of existence.
It is impelled by the universal to develop itself.
It is done by all kinds of experience.



உலகத்தின் பிரம்மத்துடனும் ஒன்றுபட்டதில்லை.
உலக அனுபவத்தின் மூலம் ஆழ்மனம் அதையடைகிறது.
அடிமனம் உள்ளூற தன்னையறிந்தது.
அது விஷயத்தின் ரஸத்தை அறியும்.
எல்லா தொடர்புகளும் அதற்கு ஒன்றே.
ஆசையின் பண்புகளை அது அறியும்.
அதன் அளவுகோலை அறியும்.
தன் மேல் நிலையில் அதற்குரிய ஸ்பர்சத்தை அனுமதிக்கிறது.
வலி, சந்தோஷம், பாராமுகத் தொடர்புகள் அவை.
எல்லாவற்றையும் ஒன்றுபோல ஏற்கிறது.
உண்மையான ஆத்மா உள்ளேயுள்ளது.
எல்லா அனுபவமும் அதற்கு இதமானது.
ஞானம், சந்தோஷம், பலம் ஆகியவற்றை அதனின்று சேகரம் செய்கிறது.
தன் கருவூலத்தை அவற்றால் நிரப்பி வளர்கிறது.
ஆசை சுருங்குகிறது.
உண்மையான ஆத்மா ஆசையை பொறுத்துக் கொள்ள கட்டாயப்படுத்துகிறது.
வலியைத் தேடிப் பெறுமாறு ஆத்மா ஆசையை வற்புறுத்துகிறது.
அதில் சந்தோஷத்தைக் காண வற்புறுத்துகிறது.
ஆசை விரும்புவதை மறுக்கச் சொல்கிறது.
ஆசையின் தேவைகளை எதிராக மாற்றவும் கட்டாயப்படுத்துகிறது.
எல்லாவற்றிலும் சமமான பாராமுகம் கொள்கிறது.
சந்தோஷத்திலும் சமமாக இருக்கிறது.
வாழ்வின் வேறுபாடுகளைச் சமமாக அனுபவிக்கிறது.
பிரபஞ்சம் அதை வளர கட்டாயப்படுத்துகிறது.
எல்லா வகையான அனுபவங்களாலும் அதைச் செய்கிறது.

It is to grow in Nature.
We may live only in the surface desire-soul.
We could no more change.
Or advance than the plant.
Or stone.
They are immobile.
They have a routine existence.
Because life is not superficially conscious.
There is a secret soul.
It has as yet no instrument.
It can rescue life out of its fixed gamut.

Into which it is born.
Left to itself it will circle in the same grooves.

The old philosophies have a view. ***Page 224***
To them pleasure and pain are inseparable. ***Para 9***
So also intellectual truth and falsehood.
Power and incapacity are so.
Birth goes with death.
They are the excitations of world-Self.
A blank response is total indifference.
It is the only possible escape.
There is a subtler psychological view.
Our view is based on surface facts of existence.
The problem has many other possibilities.



இது இயற்கையின் வளரும் வழி.
நாம் மேல்மன ஆசையெனும் ஆத்மாவில் வாழலாம்.
நம்மால் மாற முடியாது.
தாவரங்களைவிட அதிகமாக வளர முடியாது.
கல்லைப் போலிருக்கலாம்.
இவை சலனமற்றவை.
மாற்றமற்ற வாழ்வுடையவை அவை.
வாழ்வு மேலெழுந்த அளவில் தன்னையறியாது.
இரகஸ்யமான ஆத்மாவுண்டு.
இதுவரை அதற்குக் கருவியெழவில்லை.
வாழ்வின் மாறாத சட்டங்களினின்று அவற்றைக் கருவி விடுவிக்கலாம்.
அது அங்குப் பிறந்தது.
ஆசையை அதனிஷ்டத்திற்கு விட்டால் ஒரே வழியில் மீண்டும் மீண்டும் செல்லும்.

பழம்பெரும் தத்துவங்கட்கு ஒரு அபிப்பிராயம் உண்டு.
சந்தோஷமும் வலியும் பிரிக்க முடியாதவை என்பது அவர் கருத்து.
அறிவு அறியும் உண்மையும், பொய்யும் அப்படியே.
திறமையும், திறமையற்ற நிலையும் அது போன்றது.
பிறப்பும் இறப்பும் அதுபோல்.
அது உலக ஆன்மாவின் உந்துதல்கள்.
முழுவதும் புறக்கணிப்பதே சும்மா இருப்பது.
அது மட்டுமே தப்பும் வழி.
சூட்சுமமான மனோதத்துவம் ஒன்றுண்டு.
நாம் அறிவது மேலெழுந்தவாரியான விஷயம்.
இதனுள் ஏராளமான இதர விஷயங்களுள்ளன.

Our view does not exhaust them.
We can bring the real soul to the surface.
It can replace the egoistic standards.
They are the standards of pleasure and pain.
There is an all-embracing delight.
It is impersonal-personal.
The lover of Nature does this.
He takes joy in all things of Nature.
It is universal.
It admits of no repulsion or fear.
It has no mere liking or disliking.
Men find things mean and insignificant.
Things are base and savage.
They are terrible and repellent.
He sees the beauty in it.
The artist and poet do it.
They seek rasa in the universal form.
They find it by the aesthetic emotion.
Or from the physical line.
Or from the mental form of beauty.
Or from the inner sense.
Power of ordinary man turns away.
Or to which he is attracted.
It is by a sense of pleasure.
The seeker of Knowledge does it.
The God-lover does it.
They find their object of love everywhere.



நம் கருத்து அவற்றைக் கருதவில்லை.
உண்மையான ஆத்மாவை மேலே கொண்டு வரலாம்.
அகந்தையின் சட்டங்களை அது விலக்கும்.
அவை வலி சந்தோஷத்திற்குரிய சட்டங்கள்.
அனைத்தையும் உட்கொண்ட ஆனந்தமுண்டு.
அது குறிப்பாகவும் பொதுவானதுமாகும்.
இயற்கை அழகை அனுபவிப்பவனுக்கு இது தெரியும்.
காண்பவற்றிலெல்லாம் ஆனந்தம் எழுகிறது.
இது பொதுவானது, விலக்கற்றது.
இதற்குப் பயமோ, வெறுப்போயில்லை.
இதற்கு விருப்பு வெறுப்போயில்லை.
மனிதர்கட்கு அர்த்தமற்ற சிறு விஷயங்களுண்டு.
விஷயம் பொருளற்ற நாகரிகமற்றதாக இருக்கும்.
பயங்கரமான வெறுப்பானவை.
அவனுக்கு அவற்றில் அழகு தெரியும்.
கலைஞனும் கவிஞனும் அந்த அனுபவம் பெறுகிறார்கள்.
பொது ரூபத்தில் ரஸம் தெரியும்.
அழகுணர்ச்சியால் அதைக் காண்கிறார்கள்.
இயற்கை கோடிட்டுக் காட்டுவதைக் காண்கின்றனர்.
மனம் அறியும் அழகு அதை உணர்த்தும்.
உள்ளுணர்வில் அறிகின்றனர்.
எளிய மனிதன் விலகும் நோக்கத்தாலும்
அவனைக் கவரும் திறமையாலும் அறிகின்றனர்.
சந்தோஷ உணர்வால் அதைச் செய்கின்றன.
ஞானி இதைச் செய்கிறான்.
பக்தனும் இதைச் செய்கிறான்.
கடவுளை எங்கும் அவர்கள் தேடுகிறார்கள்.

The spiritual man, the intellectual, the sensuous, the aesthetic all do this.

Each does it in their own fashion.

They seek the knowledge, the Beauty, the joy or the Divinity.

If they would find them embracingly, they do it.

There are parts where our little ego is usually strong.

Our emotional or physical joy belongs to it.

Suffering, pleasure and pain of life are like this.

Before them our desire-soul is utterly weak and cowardly.

The application of the divine principle becomes supremely difficult.

To many it seems impossible.

It looks monstrous and even repellent.

The ignorance of the ego shrinks.

It shrinks from the principle of impersonality.

It yet applies it in Science without too much difficulty.

It does so in Arts.

It is so even in a certain kind of imperfect spiritual living.

Because there the rule of impersonality does not hinder.

It does not hinder those desires.



ஆன்மீகவாதி, அறிவாளி, உணர்ச்சி வயப்பட்டவன், அழகு உணர்பவன் அனைவரும் இதைச் செய்கின்றனர்.

ஒவ்வொருவரும் தங்கள் பாணியில் செய்கின்றனர்.

ஞானம், அழகு, ஆனந்தம், தெய்வீகத்தை அவர்கள் தேடுகிறார்கள்.

இவற்றை முழுமையாகத் தழுவ முடியுமானால், அதைச் செய்கிறார்கள்.

அகந்தை முனைப்பாக உள்ள இடம் உண்டு.

நம் உணர்ச்சி உடல் அறியும் சந்தோஷம் இதற்குட்பட்டது.

துன்பம் வலி சந்தோஷம் இதற்குட்பட்டவை.

அவை முன் நம் ஆசை திறனற்று பயந்து நிற்கும்.

தெய்வீக சட்டம் அவை முன் செயலற்று நிற்கும்.

முடியாது எனப் பலரும் நினைக்கின்றனர்.

பயங்கரமாகவும், வெறுப்பாகவும் தோன்றும்.

அகந்தையின் அறியாமை சுருங்கும்.

பொதுச்சட்டத்தின் முன் அகந்தை சுருங்கும்.

சிரமமில்லாமல் விஞ்ஞானம் பொது தத்துவத்தை அனுமதிக்கிறது.

கலைக்கும் இது பொது.

ஆன்மீகம் எனக் கருதும் சிலவற்றிலும் இதை ஏற்கின்றனர்.

அங்கெல்லாம் பொதுத் தத்துவம் தடை செய்வதில்லை.

ஆசையை அது தொடுவதில்லை.

It is fixed by the surface mind.
The outward life is most vitally interested in the surface.
There are freer movements.
We have higher movements.
There only limited equality is demanded.
It is a specialised equality.
It is impersonality proper to a particular field.
It is a particular consciousness.
This is so when the egoistic basis remains with us.
Our lower life is there.
The whole foundation of our life is to be changed.
Only then impersonality will be let in.
The desire-soul finds it impossible.

*Contd....*

❃❃❃

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

***அன்னை விரும்புவது என்ன?***

***"என்னை நெருங்கி வந்து, என்னை உனக்குள் அதிகபட்சம் பயன்படுத்திக் கொண்டு - நல்லதற்கு மட்டும் - என்னுடன் நீ இரண்டறக் கலப்பதை நான் பெரிதும் விரும்புகிறேன்".***



ஆசை மேல்மனத்திற்குரியது.
புற வாழ்வு மேல்மனத்தில் ஆழ்ந்து பற்றுக் கொண்டது.

நமக்குச் சுதந்திரமான செயலுண்டு.
உயர்ந்த செயல்களும் உள.
அங்கு ஓரளவு நிதானம் போதும்.
அந்த இடத்திற்குரிய நிதானமிது.
குறிப்பிட்ட இடம் தேவைப்படும் பொதுத்தன்மையிது.
அது குறிப்பிட்ட செயல்.
அகந்தையுள்ளவரை உள்ள நிலையிது.
நம் இருண்ட வாழ்வு அங்குள்ளது.
அங்கு அடிப்படையே மாற வேண்டும்.
பொதுச் சட்டம் வர அது வழி செய்யும்.
ஆசையால் அதைச் சமாளிக்க முடியாது.

*தொடரும்......*

❃❃❃

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

***சுதந்திரத்தைச் சொல்லிக் கொடுக்க முடியுமா?***

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

***அன்னை மறதியையும் நினைவுபடுத்துவார்.***

*இம்மாதச் செய்தி*

**உடலால்**

**முயன்று பெற முடியாததை**

**ஆன்மாவால்**

**முயலாமல் பெறலாம்.**





## P.141 Carrying with it its triple mystic cross

**புதிரான திரி சிலுவையை அதனுடன் ஏந்தி**

- ☆ பேருண்மையை உலகத்தின் காலம் வெளிப்படுத்த அழைத்து
- ☆ ஆனந்தம் வருத்தமாயிற்று, ஞானம் அஞ்ஞானமாயிற்று
- ☆ எல்லாம் வல்ல இறைவன் ஏதுமறியாத சிசுவானான்
- ☆ தியாகம் சொர்க்கத்தைப் பூலோகமாக்கியது
- ☆ முரண்பாடு வாழ்வின் அடிப்படையாயிற்று
- ☆ பிரம்மம், இறைவனெனும் சத்தியம்
- ☆ தன்னை தனக்கெதிரான அம்சங்களாக்கியது
- ☆ புருஷன் சூன்யமானான், சூன்யம் சித்-சக்தியாயிற்று
- ☆ அது இருளுமாயிற்று, அதுவே குருட்டு சக்தியின் குறுநடை பயின்றது
- ☆ புளகாங்கிதமான பூரிப்பு நிறைவு மனிதன் படும் வேதனையெனத் தோன்றியது
- ☆ புரியாத சட்டம் புதிரான விளக்கமாயிற்று
- ☆ தொலைவின் இலட்சியத்தைத் தூய்மையாகத் துலங்க முயலும் விவேகம்
- ☆ யுகாந்த லீலையை முழுமையுடன் பூர்த்தி செய்யும் மூலம்
- ☆ கண் கட்டித் தேட, முகமூடி மல்யுத்தம் புரிய, தடுமாறும் பிடியது
- ☆ அரைகுறையாக அமைந்த இயற்கை, மறைந்த ஆத்மாவின் திருமுகம்

☆ மாலை மங்கிய ஒளியில் ஒளிந்து பிடிக்கும் விளையாட்டு

☆ அன்பும், வெறுப்பும், பயமும், நம்பிக்கையும் பகுதியான முழுமையாக நடிக்கும் ஆட்டம்

☆ மனம் எனும் நாற்றங்காலில் மகிழ்ந்து தொடரும்

☆ இரட்டைப் பிரசவத்தின் மயக்கம் தரும் வேதனை

☆ முண்டியிடும் சக்தி முனைந்து பெறும் விடுதலை

☆ குரலிழந்த ஜீவனை பெருவெளியில் சந்திக்கும்

☆ பார்க்க, பேச, நெஞ்சாரத் தழுவ

☆ பெரிய ஜீவியம் பிரகாசமான ஒளியென வரும்

☆ இருவர் கட்டித் தழுவி, முயன்று, ஒருவரையொருவர் அறிந்து

☆ காந்தனின் முகத்தைக் கண்ணருகில் கொணர்ந்து

☆ உருவமற்ற வளையங்களிலும் உருவம் பெறும் உணர்ச்சி

☆ ஆத்மாவின் குழவிப்பருவம் அசைவது ஜடம் எழுப்பும் குரல்

☆ பெருமை நிறை ஆன்மா இயற்கையுள் மறைந்ததைக் கண்டான்

☆ அகண்ட சக்தி எளிமையாக ஜனிப்பதைக் கண்ணுற்றான்

☆ இறைவனின் புதிர் போடும் இடைக் கால நடையைத் தொடர்ந்தான்

☆ சரஸ்வதியின் அவதாரம் எழுப்பும் மென்மையான சுருதி

☆ விழித்தெழும் வாழ்வு விடும் நெருப்பெனும் மூச்சு

☆ மங்கிய மந்த நிலையில் எழுந்த மகத்துவங்கள்

☆ சிந்தனையின் உணர்வின் விநோத சிருஷ்டி

❋❋❋



# யோக வாழ்க்கை விளக்கம் VI

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

**II/68) நெருங்கிய இனிய உறவில் வேறொருவரைப் பாராட்டிப் பேசுவது, போற்றுவது உணர்வுக்குத் தீங்கு செய்வதாகும். அதை நியாயம் எனக் கேட்டுக் கொண்டிருப்பது நல்லதல்ல, நாகரிகமல்ல. உணர்வில் உதவாக்கரையாகும்.**

☆ **பிறரைத் தீண்டும் மனம் உறவை விஷமாக்கும்.**

- நட்பிலும், திருமணத்திலும் ஆழ்ந்து பின்பற்ற வேண்டிய சட்டம் இது.
- ஒரு தரம் தான் சாப்பிட்டேன். அது என் உயிரை எடுத்துவிட்டது என்றால், அது விஷம்.
- இதற்கு நேர் எதிரானதுண்டு. அது உயிருக்கு அமிர்தம்.
- என்னை ஒரு முறையே தரிசித்தவருக்கும் ஆயுள் முழுவதும் நான் பொறுப்பேற்கிறேன் என அன்னை கூறுவது அப்படிப்பட்டது.
  - ஒரே முறை என்றாலும் முதல் கொடுத்தவர் உயிர் கொடுத்தவர்.
  - ஒரே சொல்லானாலும் சொல்லியவர் பெரியவரானால், அதுவே வாழ்க்கையை உயர்த்துவதாகும்.

    *நேரு என் வாரிசு என்ற காந்திஜியின் சொல் அவரும் அவர் குடும்பமும் 35 ஆண்டு நாட்டை ஆள உதவின.*

  - ஒரு முறை செய்த உதவியானாலும், அது லிடியாவின் திருமணம், குடும்பம் தழைக்க உதவியது.

- ❂ பாதிரியார் சொன்ன ஒரு சொல் டான்டேக்கு மனப்பாரம் முழுவதையும் அகற்றியது.

  ஏன் நான் சிறைப்படுத்தப்பட்டேன் என இரவு, பகலாய் 3 ஆண்டு கேட்டு பதிலில்லாமல் தற்கொலை செய்ய முடிவு செய்தான்.

  கேப்டன் பதவிக்குப் போட்டி டாங்லார்ஸ், காதலிக்குப் போட்டி பெர்னாண்ட்.

  நெப்போலியன் கடிதம் தகப்பனாருக்கு எழுதப்பட்டது என்பதால் வக்கீல் அதைக் கொளுத்தியதை பாதிரியார் கூறியவுடன் டான்டே மனம் லேசாயிற்று.

  அவையனைத்தும் ஒரு சொல். அவன் பெற்றது பெரும் செல்வம், பெரிய அந்தஸ்து.

- ❂ மட்டமான ஊரில் அடிக்கடி சொல்லும் கெட்ட வார்த்தை நாகரிகமான ஊரில் ஒரு முறை கூறினால் நட்பு முறியும், உறவு அழியும்.

- ❂ ஒரு முறை போட்ட பொய்க் கையெழுத்தால் வேலை போகும், சிறை வரும்.

- ❂ நட்பு தெய்வீகமானது, திருமணம் அதனினும் உயர்ந்தது.

✲ உயர்ந்த நட்பில் ஒரு மட்டமான குணம் ஒரு முறை வெளிப்பட்டால் அந்த நட்பு முறியும்.

- ❂ நண்பனை அந்தஸ்தால் கருதினால் அதே நிமிஷம் அவனை இழந்துவிடுவாய்.

✲ திருமணத்தை உயர்ந்த அன்பாக நெகிழ்ந்து 20 ஆண்டு அனுபவித்தவர் ஒருவரிடம் ஒரு மட்டமான சொல் தவறி வாயில் வந்துவிட்டாலும் அந்த 20 ஆண்டு நெருக்கம் பலூனை ஊசியால் குத்தியது போல் போய்விடும்.

✲ சில சொற்கள் 'நீ நம்ப முடியாதவன்' எனக் காட்டும். அது



போதும் கணவன் உயிலை மாற்றி எழுதி மனைவிக்கு ஒன்றுமில்லை எனக் கூற.

- ❂ அடுத்த பெண்ணை மனதால் போற்றியதை 10 ஆண்டு கழித்து மனைவியறியும்படி கூறிய சொல் மனைவியை இழக்கும், மனைவியின் அன்பை இழக்கும், மனைவி படுத்த படுக்கையாய் உலகை விட்டுப் போய்விடுவாள். அதுபோன்ற சொல் வெளியில் போன கணவன் விபத்திலிறக்க உதவும்.

- ❂ மகனை 5 வயதில் உருப்படாதது என்று கூறிய தந்தை அவன் வேலைக்குப் போன பின் சாகும் வரை சந்திக்க முடியவில்லை என்று செய்யும். அன்றே வீட்டை விட்டு வெளியேறிய மகனும் உண்டு.

✲✲✲

**II/69) வேலையும், காலமும் உடலுழைப்பால் வாழ்பவனுக்கு மெதுவாக நகரும். ஆன்மீகவாதிக்குப் பறக்கும்.**

☆ **உடலுக்கு ஊர்ந்து வரும் காலம் ஆன்மீகத்தில் பறக்கும்.**

✲ வாயு வேகம், மனோ வேகம் என்பதைக் கூறும் உண்மை.

✲ சென்னைக்குப் போக பல மணியாகும்.

✲ மனம் நினைத்தவுடன் அங்குப் போகும்.

✲ மனம் போகும். அதற்குச் செயல் திறனில்லை.

✲ மனத்திற்கு எண்ணம், உணர்வு, செயலுண்டு.

✲ சிந்தனை மனத்தின் எண்ணம்.

✲ காவிய நயம் எண்ணம் ஆழ்ந்து உணர்வாவது.

✲ சொரணை எண்ணமும் உணர்வும் கிளர்ச்சியாவது.

✲ மூளை செயலுக்குரியது - பொருள்.

✲ மனம் சிந்தனைக்குரியது - ஜீவியம்.

- மனம் சிந்தனை, உணர்வு, செயல் பெற்றிருப்பதுபோல் உடலுக்கும் மனம், உணர்வு, செயலுண்டு.
- மனத்தின் எண்ணம் சொரணையாகி மூளையைத் தொட்டால் அது உடலின் மனத்தைத் தொடும்.
- உடல் உடனே செயல்படும்.
- உடலால் உழைப்பவன் கையால் வேலை செய்கிறான். அவன் ஒரு பொருள் வாங்க எழுந்து கடைக்குப் போக வேண்டும்.
- உயிரால் உழைப்பவனுக்குப் பதவியுண்டு. அவன் ஒரு பொருள் வாங்க ஆள் அனுப்புவான்.
- மனத்தால் செயல்படுபவனின் எண்ணம் மற்றவரின் மனத்தைத் தொடும் (Silent will). அது அப்பொருளை அவனுக்குக் கொண்டு வந்து தரும்.
- ஆன்மா முதிர்ச்சியடைந்தால் ஆன்மீக எண்ணம் செயலாகி அப்பொருளைக் கடையிலிருந்து கொண்டு வந்து தரும்.
- அப்பொருளை ஆகாயத்திலிருந்து உற்பத்தி செய்து காரைக்கால் அம்மையார் மாம்பழம்போல் கொண்டு வரும்.
- பொதுவாக அறிவாளிக்கு உழைப்பாளியைவிட எளிதில் காரியம் முடியும்.
- ஆன்மீகவாதிக்கு அதே தத்துவப்படி காலமும் வேலையும் பறக்கும்.
- எவரும் கேட்காத பணத்தை நாணயத்தைக் காப்பாற்ற எதுவும் முடியாத நிலையில் திருப்பித் தர முடிவு செய்வது ஆன்மா செய்த முடிவு - Mr.பென்னட்.
- பணம் சூட்சுமத்தில் உற்பத்தியாயிற்று.
- திருப்பித் தர முடியாதவரிடமிருந்து திருப்பித் தராத வகையில் பணம் மாயமாய் புறப்பட்டு வந்து மந்திரமாய் பலித்தது.
- டார்சி இந்நிகழ்ச்சியில் தெய்வமாகச் செயல்பட்டான்.



- பிரெஞ்சுப் புரட்சி சூழலாக அமைந்தது.
- கார்டினர்களுடைய நல்லெண்ணம் கருவியாகப் பயன்பட்டது.
- Mr.பென்னட் இந்த விஷயத்தில் ஆன்மாவிலிருந்து செயல்பட்டதால்,
  - கிடைக்காத தம்பதிகள் கிடைத்தனர்.
  - முடியாத திருமணம் முடிந்தது.
  - இல்லாத பணம் எழுந்து வந்தது.
  - கடன் வரமாக, வரப்பிரசாதமாக மாறியது.
  - Mr.கார்டினர் சொல்லியதுபோல் அத்தனைக்கும் தம்பதிகள் தகுதியற்றவர்.

*தொடரும்....*

❋❋❋

### ஸ்ரீ அரவிந்த சுடர்

***பலிக்காத பிரார்த்தனையை மீண்டும் செய்வதற்குப் பதிலாக, பலிக்கவில்லை என்ற தோல்வியைச் சமர்ப்பணம் செய்ய வேண்டும்.***

### ஸ்ரீ அரவிந்த சுடர்

***பணம் பாதாளம் வரை செல்லும்.***

***நேரம் வந்தால் பணத்தால் எதுவும் செய்ய முடியாது எனப் புரியும். அதுவே அதிர்ஷ்டமான நேரம்.***

# பூரணயோகம் - முதல் வாயில்கள்

*(சென்ற இதழின் தொடர்ச்சி.....)*

கர்மயோகி

## 61. சிறந்த நண்பர்கள் கடுமையான எதிரியாவது - தலைகீழ் திருவுருமாற்றம்.

- பற்றறுத்தல் சன்யாசிக்கு முதற்கடமை.
- பூரண யோகம் வாழ்வை ஏற்றாலும், பற்றறுப்பது அவசியம்.
- குடும்பத்தைப் பாசத்தால் ஏற்காமல், பற்றால் ஏற்காமல், பண்பாலும், கடமையாலும் ஏற்க வேண்டும்.
- ஏற்றால் பாசமாக ஏற்பான். இல்லையெனில் ஏற்கமாட்டான்.
- **உயர்ந்த முறையில் செய்வது மனிதனுக்கு உகந்த வழியில்லை**.
- கடிகாரத்திற்குச் சாவி கொடுப்பது, பாட்டரி மாற்றுவது, பாசத்தால் செய்வதில்லை. கடமை.
- கடமை தவறாது, பாசம் எழாது.
- பாசமும், பற்றும் எழாமல் கடமையைச் செய்வது செயலுக்குரிய பண்பு (work value).
- சிறந்த நட்பு, நெகிழ்ந்த உணர்வாகும். உணர்ச்சியில்லாமல் நட்பில்லை.
- சிறந்த நண்பர்கள் உணர்வின்றி விலகி, கடமையைச் செய்வது மனித இயல்பில்லை.
- மனித சுபாவம் நண்பர்கள் விலக அவர்களை எதிரியாக்கும்.
- **கடுமையான எதிர்ப்பு, ஆழ்ந்த வெறுப்பாக்கி, காத தூரம் விலக்கும்**.
- ஒருவருக்கு யோகப் பக்குவம் வந்தபின், உறவு நட்பு விலகும் மார்க்கம் எதிரியாவது.



- எதிரியாக்காமல், இயல்பாக விலக, தன் நிலையுணர்ந்து விலக பக்குவம் வேண்டும்.
- அன்பருக்குப் பக்குவமிருந்தாலும், அடுத்தவர் எதிரியாகத் தவறமாட்டார்.
- பக்குவமிருந்து எதிரியாகாமல் பிரிபவர் பிரிவின் கண் பீழை தராதவர். கீழ் மக்களது நட்பு விலகும் பொழுது மனம் கசங்குவதில்லை என்பது திருக்குறள்.
- சிஷ்யர் ராமானுஜரை விட்டு குரு யாதவப் பிரகாசர் பிரிந்திருக்கலாம். ஆனால் அவருக்குச் சிஷ்யரைக் கொலை செய்யும் எண்ணம் எழுந்தது.
- சிஷ்யன் ஆன்மீக விளக்கம் பெற குருவுக்குப் பணிகிறான்.
- குரு ஆன்ம விழிப்பற்ற, வெறும் மனிதனானால், சிஷ்யன் ஆன்ம விளக்கம் பெற்ற உயர்ந்த ஆத்மாவானால், குருவுக்குப் பணிவு தெரியும். பணிவால் சிஷ்யன் உயிரும் தன் கைவசம் உள்ளது தெரியும்.
- **பணிந்தவனைத் தண்டிக்காமலிருக்கப் பக்குவம் வேண்டும். பணிவதால் குருவுக்குச் சிஷ்யன் மீது அதிகாரம் ஏற்படுகிறது. அது தன்னைச் செலுத்தத் தவறாது. அவசியமில்லாவிட்டாலும் அதிகாரம் தன்னைச் செலுத்தி மகிழும்**.
- பொதுவாக குருவுக்கு உள்ளபடி பணிபவர்கள் அதிகாரத்தைச் செலுத்த முடியாத பக்குவம் உள்ளவராக இருப்பார்கள்.
- இது அவர் ஆத்ம உயர்வால் எழும் சுதந்திரம்.
- இந்தச் சுதந்திரத்தை உடனுள்ளவர் தவறாகப் பயன்படுத்துவார்கள்.
- தாய், தகப்பனார் முதல் இந்த இடத்தைத் தவறாகப் பயன்படுத்துவார்கள்.
- மகன் ஏமாந்தவன் எனக் கருதுவார்கள். அவனுக்குரியதைத்

தரமாட்டார்கள். கேலி செய்வார்கள். வெறி ஏற்றுவார்கள். ஆன்ம விளக்கமுள்ளவர் அளிக்கும் சுதந்திரத்தை இப்படித் தவறாகப் பயன்படுத்தினால், வேலை போகும், உயிர் போகும், சொத்து அழியும், வந்த வியாதி வாழ்நாள் முழுவதும் போகாது. பலன் நாள் கழித்து வருவதால் அது தெரிவதில்லை. ஆத்ம பலன் பெற்றவர் அப்படி நடந்தால், அத்தனையும் போகும், உடலிலுள்ள தேஜஸ் மாறி கறுப்பாக மாறும். எல்லாமிருந்தும் எதுவும் சாப்பிட முடியாது. சொந்த உடைமையை உரிமையுடன் அனுபவிக்க முடியாமல் கெஞ்சிக் கேட்டு சிறிது பெற வேண்டும்.

- வாழ்க்கை நண்பர்களை எதிரியாக்குவது, விலக்குவது, பூரண யோக வாயில் திறப்பதாகும்.
- கருமியாக சொத்து சேர்த்தவர், வட்டிக்குச் சம்பாதித்தவர், ஆன்ம விளக்கமுள்ளவர்க்குச் சொத்து கொடுக்க விரும்பினால், அந்தச் சொத்து, இந்த ஆத்மாவை வந்தடையாது.
- நம் நண்பர்கட்குச் செய்யும் சிறந்த சேவை அவர்களை நாம் மறப்பது என்கிறார் அன்னை.
- அன்பர்கள் வாழ்வு பொலிவு பெறுவதை அறிவோம். அவர்களுடன் தூர உறவுள்ளவர் வாழ்வில் அமோகமாக செல்வம் பெருகுவதைத் தவறாது காண்கிறோம். தூர இருந்தாலும் அருள் அவர்கள் வாழ்வில் செயல்படுகிறது. எட்ட இருப்பதால் கெட்ட எண்ணம் அருளைத் தடுப்பதில்லை என்பதால் பெருஞ்செல்வம் திரள்கிறது.
- **ஒரு அன்பரால் சில நாட்களுக்கு எந்த மனக்குறையுமின்றி, எந்தக் கெட்ட எண்ணமுமின்றி இருக்க முடியுமானால், அந்தக் குறுகிய காலத்தில் பெரும் செல்வம் பெருகுவதைக் காணலாம்.**
- விலகும் நண்பர் விலகும் தரித்திரம்.

*தொடரும்.....*

❋❋❋





## P.39 It is so free that it is not even bound by its liberty

### பிரம்மத்தின் சுதந்திரம் பூரணமானது. அதன் சுதந்திரத்திற்கும் கட்டுப்பட்டதல்ல

- மனிதன் சட்டத்திற்குக் கட்டுப்பட்டவன்.
- வக்கீல் கட்சிக்காரனை விட சட்டத்திற்கு அதிகமாகக் கட்டுப்பட்டவன்.
- ஜட்ஜ் தான் அமல்படுத்தும் சட்டத்திற்குக் கட்சிக்காரனை விட, வக்கீலை விட அதிகமாகக் கட்டுப்பட்டவர். முழுமையாகவும் கட்டுப்பட்டவர். அது மனித நிலை.
- சீனுவாச ராமானுஜம் மேதை.
- மேதாவிலாசம் தெய்வாம்சமுடையது.
- தெய்வாம்சம் மனித நிலைக்கு, மனித சட்டத்திற்குட்படாது.
- ராமானுஜம் இன்டர்மீடியட் பாஸ் செய்யவில்லை, பட்டம் பெறவில்லை.
- மேதையைப் பட்டம் கட்டுப்படுத்தாது.
- அவரைக் கேம்பிரிட்ஜுக்கு அழைத்தனர்.
- பி.ஏ. பட்டம் கொடுத்தனர்.
- சென்னை சர்வ கலாசாலை இன்டர்மீடியட் பட்டம் தர மறுத்தபின் கேம்பிரிட்ஜில் பி.ஏ. வழங்கினர்.
- பிறகு எம்.ஏ.யும் வழங்கினர்.

- இன்று வரை அவர் எழுதியதைப் புரிந்து கொள்ள எவராலும் முடியவில்லை.
- அவர் மேதாவிலாசம் உலக ஞானத்தைக் கடந்தது.
- அவருக்கு டாக்டர் பட்டம் வழங்கவில்லை.
- அவர் பெற்ற எம்.ஏ. பட்டம் அவர் ஞானத்தைக் கட்டுப்படுத்தாது.
- பெற்ற எம்.ஏ. பட்டத்தாலோ, பெறாத டாக்டர் பட்டத்தாலோ அவர் மேதாவிலாசம் கட்டுப்படாது.
- டாக்டர் பட்டம் பெற்றால்தான் அவர் ஞானத்தை உலகம் ஏற்கும் என்பதில்லை.
- அவர் ஞானம் எல்லாப் பட்டங்களையும் கடந்தது.
- யாருக்குமில்லாத சுதந்திரம் பிரம்மத்திற்கு உண்டு.
- அந்தச் சுதந்திரத்தையும் இழக்கும் சுதந்திரமும் பிரம்மத்திற்குண்டு.
- அந்தச் சுதந்திரத்தாலும் பிரம்மம் கட்டுப்படாது.
- இதுவரை எவரும் பிரம்மத்தை இதுபோல் வர்ணித்ததில்லை.
- இந்த விளக்கத்தால் பகவான் சத்திய ஜீவியம் உலகை சிருஷ்டித்தது எனக் கூற முடிந்தது.
- அனந்தம் என்றால் முடிவற்றது என்று பொருள். முடிவற்றது தன்னை ஒரு முடிவுக்குள் கட்டுப்படுத்த முடிவு செய்தால் அதுவும் அதற்கு முடிவு.
- முடிவற்றது என்பதால் எந்த முடிவுக்குள்ளும் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளும் முடிவும் அதற்குண்டு என்று பகவான் கூறுகிறார்.

❃❃❃





## P.300 Mother too takes medicines

*(Vol. V, 1964)*

### அன்னையும் மருந்து சாப்பிடுகிறார்கள்

- எந்தச் சட்டமும் எல்லா நேரமும் செல்லும் எனக் கூற முடியாது.
- மருந்தை நம்பக் கூடாது என்ற அன்னை மருந்து சாப்பிட வேண்டும் என்று கூறியுள்ளார்.
- சாப்பாடு அவசியம் என்றால் தொடர்ந்து சாப்பிட வேண்டும் என்று அர்த்தமல்ல. அது முடியாது, கூடாது. சாப்பாடு நேரத்திற்குத் தகுந்தாற்போல் மாறும். சாப்பாடும் அவசியம், தண்ணீரும் அவசியம்.
- எதற்கும் அளவுண்டு, நேரமுண்டு, காலம் உண்டு, சட்டம் உண்டு, விலக்குண்டு. ஒரே மாதிரியாகச் செயல்பட நினைப்பது அறிவுக்கு அனுபவமில்லை எனப் பொருள்.
- ஒரு ஐரோப்பிய பெண் ஆசிரமம் வந்தபின் மருந்து சாப்பிட மறுத்த பொழுது, அன்னை வற்புறுத்திச் சாப்பிடச் சொன்னார்.
- சட்டம் எதுவானாலும் நம் மனநிலைக்கு உகந்தவாறு அதை சட்டத்தின் திட்ட எல்லைக்குள் மாற்றி அமைப்பது முறை. அதை மறுப்பது சட்டத்தின் பெரும் பயனைத் தவறவிடுவதாகும்.
- தியானம் உயர்ந்தது. தபஸ்விகள் நாள்கணக்காகத் தியானத்தில் தங்களை இழந்தனர். பூரணயோகத்தில் தியானத்தைவிட சமர்ப்பணம் உயர்ந்தது. தானே நம்மைத் தேடிவரும் தியானம் நல்லது.
- நாமே முயன்று தியானம் வருகிறது என்பதால் வலிந்து

மணிக்கணக்காகத் தியானத்தை மேற்கொண்டால் படபடப்பு வரும். தானே வரும் தியானம் தானே கலையும்.

- அகங்காரம் கூடாது. அறியாமை பாதிக்கும். அறியாமையின் வகைகள் பல.
  - பொருத்தமில்லாமல் பிறரைப் பார்த்து அவர் செய்வது போல் நாமும் செய்வது.
  - பகுதியான சட்டத்தை முழுமையாகப் பின்பற்றி விரயமாவது.
  - முழுமையான சட்டத்தைப் பகுதியாகப் பின்பற்றி பலனை இழப்பது.
  - முடியும் என்பதால் செய்துவிட்டுப் பலனைக் கண்டு அதிர்வது.
  - எவரும் கேட்கவில்லை என்பதால் அளவுக்கு மீறிச் செயல்படுவது.
  - தவற்றுக்குத் தண்டனை கொடுக்கவில்லையென்பதால் தொடர்ந்து செய்து அனைத்தையும் இழப்பது.
- நேரு பெரும் தலைவர், உலகத் தலைவர். 1936இல் அவர் சுயசரிதை இங்கிலாந்தில் அதிகபட்சம் விற்றது. தன் மகளுக்கு M.P. பதவியும் தராதவர். பெரும் தியாகி. மகாத்மாவின் பிரதம சீடர்.
- வாழ்நாள் முழுவதும் மகாத்மாவையும் அவர் அகிம்சையையும் பின்பற்றிப் பெருமைப்பட்டவர்.

  சர்வதேச அரசியலில் அகிம்சையைப் பின்பற்ற வல்லரசுகளுடன் கூட்டுச் சேராத இயக்கத்தை ஆரம்பித்து உலகப் பாராட்டைப் பெற்றார்.
- சீனாக்காரர்களை அக்கொள்கை நம்ப வைத்தது. சீனர்கள் துரோகம் செய்தார்கள். 1962இல் சீனா தாக்கியது. 1964இல் நேரு காலமானார்.



- செய்வது சரியானாலும், நோக்கம் உயர்ந்ததானாலும், இடம், பொருள், ஏவல் அறிந்து நடக்க அறிவு போதாது, அனுபவமும் போதாது, அனுபவ அறிவு தேவை.
- தவறு எனப் புரிந்த பிறகும் மாற மறுப்பவரும் உண்டு.
- அன்னையும் மருந்து சாப்பிடுகிறார் என்பது இந்தச் சட்ட நுணுக்கங்களை எடுத்துக் காட்டுகிறது.
- இதுபோன்ற விஷயங்களை அன்னை வலியுறுத்துகிறார்.

❋❋❋

## ஜீவிய மணி

**தவறாத பிரார்த்தனை தவறினால், பெரிய பலன் தவறாது வரும் தகுதி வரும்.**

**தான் செய்தால் நியாயம்; பிறர் செய்வது அநியாயம் என்பது அகந்தையின் ஆணவ மந்திரம்.**

**பிறர் பெருமையை, திறமையை ஏற்க முடியாத மனம் பொறாமைக்குரியது.**

**சத்திய ஜீவியம் வாழ்வில் அதிர்ஷ்டம்.**

**சர்வ ஜீவராசிகளுக்கும் ஆத்மா உண்டு. அதுவே அவற்றின் ஜீவன்.**

**ரிஷிக்கு நிஷ்டையில் சித்தித்த பிரம்மம் அன்பருக்கு The Life Divine படிப்பால் சித்திக்கிறது.**

# அன்பர்களும் அன்றாட வாழ்க்கை நெறிமுறைகளும்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

## 4. உன்னைத் தேடி வரும் அன்னை

குழந்தைகளின் உள்ளம் தூய்மையானது. தூய்மையான உள்ளத்தின் பிரார்த்தனையை அன்னை பூரணமாக ஏற்றுக்கொள்கின்றார். தூய்மை முழுமையாக இருந்தால் பூஜைகள், மந்திரங்கள், எதுவும் தேவையில்லை.

ஒரு பெண்மணிக்குக் கடுமையான வயிற்று வலி. அது அவரைப் பன்னிரெண்டு ஆண்டு காலமாகப் படாதபாடு படுத்திக் கொண்டிருந்தது. ஒரு நாள் அவருக்கு வலி அதிகமாகிவிட்டது. மருந்துகளுக்கெல்லாம் அது அசைந்து கொடுக்கவில்லை. நிமிடத்திற்கு நிமிடம் வலி அதிகமாகிக் கொண்டே போயிற்று. அவர் புழுவாய்த் துடித்தார். அதிலிருந்து விடுதலை பெற உயிரை மாய்த்துக் கொள்வது எனத் தீர்மானித்தார்.

அந்தத் தீர்மானத்தை எதிர் மறுத்தது அவருடைய குழந்தைப் பாசம். அவருக்கு மூன்று குழந்தைகள். எல்லோரும் சின்னஞ்சிறுசுகள். அவற்றை ஆதரவு இல்லாத நிலைக்கு ஆளாக்கிவிட்டு நிம்மதியாகக் கண்ணை மூட நினைப்பது என்ன நியாயம்? இந்த நியாயங்களை எல்லாம் நினைத்துப் பார்ப்பதற்கு வயிற்று வலி அவரை அதிக நேரம் விட்டால்தானே? வயிற்றுக்குள் இடி இடிக்கிறது; கத்தி ஒன்று சுழன்று சுழன்று வருகிறது. இந்தக் கொடுமையில் இருந்து தப்ப வேண்டும் என்றால், தற்கொலை செய்துகொள்வதைத் தவிர வேறு வழியே இல்லை. அவர் தீர்மானித்துவிட்டார்; 'எல்லோரும் உறங்கிய பிறகு கிணற்றில் விழுந்து உயிரை விட்டுவிட வேண்டும்'.



அவரின் உயிருக்கு உயிரானவர்கள் அவரை விட்டால்தானே? அவருடைய கணவரும், குழந்தைகளும் அவரைச் சூழ்ந்து உட்கார்ந்துகொண்டு, அவர் துடிப்பதைப் பார்த்துத் துயருற்றுக் கண்ணீர் பெருக்கிக் கொண்டிருந்தார்கள்.

அவருடைய குடும்பத்தினர் அன்னையின் பக்தர்கள். அவர்கள் அனைவருமே அன்னையைப் பலமுறை தரிசித்து ஆசீர்வாதம் பெற்றவர்கள். அவருடைய கணவர் கண்ணீருக்குள் நீந்திச் சென்று அன்னையைப் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தார். அப்பொழுது 'குழந்தைகளின் தூய்மையான பிரார்த்தனையை அன்னை பூரணமாக ஏற்றுக் கொள்வார்' என்று எங்கேயோ படித்தது அவருக்கு ஞாபகம் வந்தது. கண்களைத் திறந்தார். அவருடைய ஏழு வயதுள்ள இரண்டாவது மகன், தன் தாய் துடிப்பதைக் கண்டு தானும் துடித்துக் கதறிக் கொண்டிருந்தான். அவனுக்கு மற்ற குழந்தைகளைவிட அம்மாவின்மேல் அதிகப் பாசம். தந்தை அவன் கண்ணீரைத் துடைத்துவிட்டு, ''நீ அன்னையைப் பிரார்த்தனை செய்தால் அம்மாவுக்கு வலி நின்று போய்விடும், செய்கிறாயா?'' என்று கேட்டார்.

''செய்கிறேன்'' என்று உடனே பதில் அளித்த பாலகன், கண்களை மூடிக்கொண்டு பிரார்த்தனையைத் தொடங்கினான். அவனை நேரில் பலமுறை அன்னை ஆசீர்வதித்திருக்கின்றார். அத்தகைய பேறு பெற்ற அந்தப் பிஞ்சுக் குழந்தை, அன்னையைத் தீவிரமாகப் பிரார்த்தனை செய்தான். நிமிடங்கள் கரைந்தன, மணிகள் கரைந்தன, காலத்தைக் கடந்து அவன் அன்னையோடு ஒன்றிப்போனான்.

அந்த நேரத்தில் ஓர் அற்புதம் நிகழ்ந்தது. அந்தப் பெண்மணியின் வயிற்று வலி, சிறிது சிறிதாகக் குறைந்துகொண்டே வந்தது. அழுதவர் வதனத்தில் புன்னகை அரும்பியது. அவர் கணவருக்கும், மற்றவர்களுக்கும் ஆறுதல் பிறந்தது.

தன் கடமை முடிந்த களைப்பில் குழந்தை தாயின் மேல் படுத்து

உறங்கிப் போனான். வலி குறைந்த நிம்மதியில் தாயும் உறங்கலானார். அந்தக் காட்சியை நோக்கிய கணவரின் கண்கள் ஆனந்தக் கண்ணீர் பெருக்கின.

மறுநாள் பொழுது விடிந்தது. அந்தப் பெண்மணியின் கணவர் எழுந்திருக்கச் சிறிது நேரமாயிற்று. எழுந்ததும் படுத்திருந்த அவருடைய மனைவியைக் காணவில்லை. பதற்றத்துடன் அவரைத் தேட ஆரம்பித்தார். அவர் சமையற்கட்டில் காப்பி போட்டுக்கொண்டு இருந்தார்.

அவரை நெருங்கி, "வயிற்று வலி எப்படி இருக்கிறது?" என்று கேட்டார் கணவர்.

"இப்பொழுது எவ்வளவோ தேவலை" என்றார் மனைவி.

"நம் இரண்டாவது பையன் அன்னைக்குச் செய்துகொண்ட பிரார்த்தனையால்தான் உனக்கு வயிற்று வலி குறைந்தது" என்றார் கணவர்.

'அன்னைக்குப் பிரார்த்தனை செய்துகொண்டால் எவ்வளவு பெரிய நிவாரணம் கிடைக்கிறது!' என்பதை அப்பொழுதுதான் தெரிந்து கொண்டார் அந்தப் பெண்மணி. அவர் அதுவரை அன்னையைத் தரிசித்ததும், வணங்கியதும், பொதுவாகக் கோயிலுக்குப் போய்வரும், சம்பிரதாய அடிப்படையில் ஏற்பட்டவைதாம். 'அதற்கும் அப்பால் சென்று அன்னையை உணர்ந்து, நெகிழ்ந்து, கரைந்து பிரார்த்தனை செய்துகொண்டால், தொல்லை கொடுக்கும் வல்வினைகள் யாவும் மறைந்து, அதிசயப்படத்தக்க அளவில் பல நலம் பெருகும்' என்பதை அவர் அறிந்திருக்கவில்லை. இப்பொழுது அவர் அவருடைய இரண்டாவது மகன் மூலமாக அதை அறிந்துகொண்டதும், அன்னையை 'சிக்'கெனப் பிடித்துக்கொண்டார். தம் வயிற்று வலி முழுவதுமாக நீங்க வேண்டுமென அன்னையிடம் அல்லும்பகலும் வேண்டினார்.



சில நாட்கள் சென்றன. ஜன்மாந்தரப் பழியாய் வந்து அவரைப் பற்றி, வதைத்துக் கொண்டிருந்த வயிற்று வலி அவரைப் பூரணமாக விடுதலை செய்துவிட்டு மறைந்தது.

நாட்டுக்கோட்டைச் செட்டியார் ஒருவர் சென்னையில் திரைப்பட விநியோகத் தொழில் செய்துவந்தார். மைசூரில் அவருக்குச் சிறிய எஸ்டேட் ஒன்றிருந்தது. அந்த நிலையில் ஓர் அன்னை பக்தரிடமிருந்து ஒரு பெரிய காப்பி எஸ்டேட் வாங்கினார். அதற்குப் பிறகு அவர் தம்முடைய சிறிய காப்பி எஸ்டேட்டை விற்றுவிடத் தீர்மானித்தார். ஆனால் அவர் அதை விலை கூறி விற்கவோ அல்லது குறைந்த விலைக்கு விற்கவோ தயாராக இல்லை. தம் அந்தஸ்தை நிலைநாட்டும் அளவில் அந்தப் பேரம் அமைய வேண்டும் என்று விரும்பினார். அரசல்புரசலாக அந்தச் செய்தியை தம்முடைய வட்டாரத்தில் தெரிவித்துவிட்டு, 'எனக்கு அதை விற்க வேண்டிய அவசியம் இல்லையாக்கும்!' என்ற பாவனையோடு இருந்தார் செட்டியார்.

அந்தக் காப்பி எஸ்டேட் அன்றைய மார்க்கெட் நிலவரப்படி ஒன்றேகால் இலட்சம் ரூபாய் பெறும். அதை வாங்குவதற்குப் பல பெரிய புள்ளிகள் வட்டமிட்டனர். அப்பொழுதெல்லாம் அவர் தம் எஸ்டேட்டின் சிறப்பை மணிக்கணக்கில் விவரித்துவிட்டு, "எஸ்டேட்டை விற்க வேண்டிய அவசியமோ அல்லது நெருக்கடியோ எனக்கில்லை. ஆனால் நண்பரான நீங்கள் கேட்கிறீர்கள், கொடுக்கிறேன். இரண்டு இலட்சம் விலை கொடுக்கிறீர்களா?" என்று கேட்டார்.

ஆர்வத்துடன் அதை விலைக்கு வாங்க வந்தவர்கள், அவர் கூறிய விலையைக் கேட்டதும் பின்வாங்கிச் சென்றுவிடுவார்கள்.

செட்டியார் அந்தப் பேரத்தை, தம் அந்தஸ்தை நிலைநாட்டும் பிடிவாதத்துடன் நடத்திக்கொண்டு இருந்ததால், எஸ்டேட்டை வாங்குவதற்கு யாரும் முன்வரவில்லை.

அந்நிலையில் ஒரு நாள் செட்டியார் தம் நண்பர் ஒருவருடன் வந்து அன்னையைத் தரிசித்தார். நெஞ்ச நெகிழ்வுடன் வணங்கினார். “நமக்கு இனி என்ன தேவை? வாழ்க்கைக்குத் தேவையான எல்லாம் இருக்கின்றன. எதுவும் தேவை இல்லை. அன்னையின் ஆசீர்வாதம் மட்டும் இருந்தால் போதும்” என்று கூறிவிட்டுப் போனார்.

அடுத்த வாரம் அவருடைய எஸ்டேட்டை ஒருவர் மூன்று இலட்சத்திற்குக் கேட்டார். மறுபேச்சு இல்லாமல் செட்டியார் உடனே விற்றுவிட்டார்.

அன்னை கேட்காமலேயே கொடுப்பவர்; கேட்டதற்கு அதிகமாகவும் கொடுப்பவர். செட்டியார் கேட்கவில்லை. ஆனாலும் ஒன்றேகால் இலட்சமே பெறுமானம் உள்ள அவருடைய எஸ்டேட்டுக்கு மூன்று இலட்சம் கிடைக்கச் செய்தார் அன்னை.

வாழ்க்கை ஒரு போர்க்களம். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான போராட்டம். இறைவன் ஒரு பக்தனை ஆட்கொள்ளும்பொழுது அவனுக்குப் பலவிதமான சோதனைகளைக் கொடுத்து, அவனைப் புடம்போடுவது வழக்கம். குடும்பத்தில் திடீர் மரணம், திடீர் வீழ்ச்சி போன்றவை வந்தால், ‘கடவுள் சோதனை செய்கிறார்’ என்கின்றோம். ஒரு பக்தனை இறைவன் அழைத்துக் கொள்ள முன்வரும்பொழுது அவனுக்குப் பல சோதனைகள் ஏற்படும். மனைவி, மக்கள், வீடு, சொத்து போன்றவற்றை அவனிடமிருந்து அப்புறப்படுத்தி, நிலையாமையைச் சுட்டிக்காட்டி, சோதனைச் சூறாவளியை எழுப்புவான் இறைவன்.

அன்னையின் வழி அதுவன்று. அன்னையின் யோகத்தில் அத்தகைய சோதனைகள் இல்லை. பொருள் நஷ்டம், மனக் கஷ்டம் போன்றவற்றைத் தரக்கூடிய சோதனைகளை அன்னை கொடுப்பதில்லை. பொருள் மீதுள்ள பற்றையும், மற்றவர் மீதுள்ள பாசத்தையும் விலக்கவே அன்னை தம் பக்தனுக்குச் சந்தர்ப்பம் அளிக்கின்றார்.



அன்னை இந்த யோக மார்க்கத்தை ‘sunlit path’ (ஒளிமயமான பாதை) என்றார். தொடக்கத்திலேயே ஆன்மாவின் பாதையை ஏற்றுக்கொள்ளச் சொல்லுகின்றார். பொய்தான் கவலைகளுக்கு அஸ்திவாரம். பொய்யை விட்டு, மெய்யைக் கடைப்பிடிக்கச் சொல்கின்றார். அப்படிச் செய்தால் சோதனைகள் இல்லை. யோக மார்க்கம் ஒளிமயமான சத்திய மார்க்கமாக அமைந்துவரும். அதன் வழியே அன்னை, பக்தனை நடத்திச் செல்கின்றார். அச்சமயங்களில் ஸ்ரீ அரவிந்தரும், அன்னையும் பக்தர்கள் இருக்கும் இடத்திற்கு வந்து காட்சி தருவார்கள்.

*தொடரும்....*

❋❋❋

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

***அன்னையின் ஸ்பர்சம் ஆனந்தத்தின் ஸ்பர்சம்.***

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

***அன்பை அன்பிற்குரியவர் பெற முடியும்.***

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

***அன்னையை அடைய ஆர்வம் போதாது; அமைதி தேவை. ஆர்வம் அமைதியாவது அன்னை.***

## அன்பர் கடிதம்

***ஓம் நமோ பகவதே ஸ்ரீ அன்னையே சரணம்!***

ஸ்ரீ அன்னை, பகவான், தவத்திரு கர்மயோகி பாதாரவிந்தங்களுக்கு அனந்தகோடி நமஸ்காரம்.

நான் கும்பகோணத்தில் வசிக்கிறேன். என் சகோதரி 2000ஆம் ஆண்டில் ஸ்ரீ அன்னை அரவிந்தர் அவர்களின் பாதாரவிந்தங்களைச் சரணடைந்ததால் அவர்களுக்குக் கிடைத்த அற்புதமான அருளைப் பற்றி எனக்கு எடுத்துரைத்தார்கள். அதன் பிறகு நானும் ஸ்ரீ அன்னை அவர்களை வணங்க ஆரம்பித்தேன்.

கும்பகோணத்தில் உள்ள தியானமையத்திற்குச் சென்று ஸ்ரீ அன்னையைப் பற்றி அறிந்து அவர்களின் வழியில் செல்ல ஆரம்பித்தேன். 2000ஆம் ஆண்டில் நான் கடன் தொல்லையினால் மிகவும் கஷ்டப்பட்டேன். எனக்கு ஒரு மகளும் ஒரு மகனும் இருக்கிறார்கள். என் கணவர் என் திருமணத்திலிருந்தே என்னுடன் சுமுகமான உறவு முறையில் இல்லை. ஏனெனில் என் மாமியாரின் வற்புறுத்தலால்தான் என்னை மணந்து கொண்டாராம். அதனால் அன்றிலிருந்து இன்றுவரையிலும் என்னுடனோ, என் பிள்ளைகளுடனோ நன்கு பேசவோ, குடும்பத்தில் எந்த ஒட்டுதலோ இல்லாமல்தான் இருக்கிறார்கள். என் மாமியார் மட்டும்தான் என்னை பெண் பார்க்க வந்து என் அப்பாவிடம் பேசி முடித்தார்கள். நான் திருச்சியில் பிறந்தேன். கும்பகோணத்தில் வாழ்க்கைப்பட்டேன்.

1979இல் எனக்கு திருமணம் நடந்தது. அன்னையை வந்தடைவது வரை நான் என் குடும்பத்தை நடத்த மிகவும் கஷ்டப்பட்டேன். நான் தையல் வேலை செய்து, வீட்டு வேலைகள் செய்து என் பிள்ளைகளைப் படிக்க வைத்தேன். என் மகள் சுமாராகத்தான் படிப்பாள். அவளை +2 வரை படிக்க வைத்தேன். மிகக்குறைந்த மதிப்பெண் எடுத்துத் தேர்ச்சிபெற்றாள். அதனால்



மேலும் தையல் பயிற்சி இரண்டு வருடப் படிப்பு படிக்க வைத்து lower, higher பாஸ் செய்தாள்.

என் பையன் நன்றாக படிப்பான். சிறு வயதிலேயே 3ஆம் வகுப்பு படிக்கும்போதே ஹிந்தி வகுப்பு சென்று படித்து, ஹிந்தி பரிட்சை எழுத ஆரம்பித்தான். 9ஆம் வகுப்பு படிக்கும்போது ஹிந்தியில் பிரவீன் பரிட்சை வரை எழுதி ஹிந்தி படிப்பை முழுவதுமாக முடித்தான். 10வது பரிட்சையில் 442 மார்க்கும், +2 தேர்வில் 1042 மார்க்கும் எடுத்தான். டியூசன் எதுவும் இல்லாமல் என் கவனிப்பும் இல்லாமல் தானாகவே படித்து கொண்டான். நான் பாவாடை, நைட்டி தைக்கும் ஒரு ரெடிமேட் கம்பெனியில் கட்டிங் மாஸ்டராக வேலை பார்த்தேன். ஒரு பாவாடை வெட்டினால் 30 பைசா கூலி. அதனால் காலை 7 மணிக்கு வேலைக்கு போனால் இரவு 10 மணிக்கு மேல் தான் வீட்டிற்கு வருவேன். எத்தனை பாவாடை வெட்டுகிறேனோ அதற்கு தகுந்தாற்போல்தான் கூலி கிடைக்கும். அதனால் காலையிலேயே சமையல் செய்துவிட்டு போனால் இரவுதான் வீட்டிற்கு வருவேன். பிள்ளைகளை கவனிக்கவோ, அவர்களுக்குப் பாடம் சொல்லி கொடுக்கவோ கூட நேரமிருக்காது. நானும் 1975இல் S.S.L.C. (XI) தேர்ச்சி பெற்றிருக்கிறேன். 600க்கு 480 மார்க் வாங்கி தேர்ச்சி பெற்றேன். 2004ஆம் ஆண்டு என் கணவர் வழி உறவிலேயே என் மகளைத் திருமணம் செய்து கொடுத்தேன். அவள் திருமணத்திற்குகூட மாப்பிள்ளை வீட்டாரின் வற்புறுத்தலில்தான் என் கணவர் திருமணத்தில் ஏதோ ஒரு உறவினர் போல வந்து கலந்துகொண்டார். 2005ஆம் ஆண்டு அவளுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தாள். 2007ஆம் ஆண்டு அவளுக்கு (என் மகளுக்கு) உடல்நிலை சரியில்லாமல் போய்விட்டது. முதலில் சாதாரண காய்ச்சலாகத்தான் இருந்தது. 2006ஆம் ஆண்டு ஜூலை மாதம் காய்ச்சலாக படுத்தவள் ஆறு மாத காலமாக படுத்த படுக்கை ஆகிவிட்டாள். பல ஆஸ்பத்திரிகளில் காண்பித்தும், பல டாக்டர்கள் அவளைப் பரிசோதித்து பார்த்தும் அவளுக்கு என்ன வியாதி என்று

டாக்டர்களால் கண்டுபிடிக்கவே முடியவில்லை. 24 வயது பெண் வெறும் 22 கிலோ எடைதான் இருந்தாள். தலைமுடியெல்லாம் கொட்டி வழுக்கைத் தலையாக முகமெல்லாம் வீங்கி பார்க்கவே மிகவும் விகாரமாக இருந்தாள். கடைசியில் மூளை புற்றுநோய் என்று சொல்லி பாண்டிச்சேரிக்குக் கொண்டுபோகச் சொன்னார்கள். ஒவ்வொரு நொடியும் அன்னையிடம் கெஞ்சி அழுதேன். என் மகளுக்கு ஏதாவது ஒன்று ஆகிவிட்டால் இந்தக் குழந்தையை எப்படி வளர்ப்பேன் என்று அழுது புலம்பினேன். என் பையன் அப்பொழுது M.Sc. Bio-Chemistry இரண்டாம் ஆண்டு படித்து கொண்டிருந்தான். என் மகளுக்கு மூளை ஆபரேஷன் செய்ய 1 லட்சம் ரூபாய் ஆகும் என்று சொன்னார்கள்.

ஏற்கனவே நான் 2½ லட்சம் ரூபாய் கடனுக்காக என் இளைய சகோதரியிடம் வீட்டின் ஒரு பகுதியை விற்றுவிட்டேன். அதன் பிறகும் இவளுடைய வைத்தியத்திற்கு 1 லட்சம் ரூபாய் வட்டிக்கு கடன் வாங்கி, வட்டி கூட கொடுக்க முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறேன்.

திடீரென்று என் பையன் அவளிடமிருந்து ரத்தம் எடுத்து கொண்டுபோய் தானே Labக்கு சென்று blood test செய்துவிட்டு, இது மூளை புற்றுநோய் கிடையாது. Bloodல் வெள்ளையணுக்கள் மிக மிக குறைவாக உள்ளதால் எதிர்ப்பு சக்தி இல்லாததால் இப்படி இருக்கிறது. நான் net மூலமாக இதற்கு எந்த டாக்டரிடம் எந்த ஆஸ்பத்திரியில் காண்பிக்கலாம் என்று Browsing Centreல் பார்த்துவிட்டு வருகிறேன் என்று சொல்லி வெளியே சென்றான். 1 மணி நேரத்திற்குள் இந்த வியாதியின் பெயர் S.L.E. நோய் என்பதாம். இந்த வியாதிக்கு treatmentக்கு சென்னை அடையாறில் மலர் ஆஸ்பத்திரியில் Dr.கிருஷ்ணமூர்த்தி என்பவரிடம் காண்பிக்கலாம் என்று சொன்னான்.

2006 டிசம்பர் 31ம் தேதி அன்று என் மகனும் என் மூத்த சகோதரி அவர்களும் என் மகளை அழைத்து கொண்டு சென்னை



சென்றார்கள். 2007 ஜனவரி 1ஆம் தேதி சென்னையில் ஆஸ்பத்திரியில் இருந்து எல்லா வகை பரிசோதனையும் செய்த பிறகு என் மகன் சொன்னது போலவே அந்த டாக்டரும் இவளுக்கு வந்திருப்பது மிகவும் கொடூரமான வியாதி, தொடர்ந்து கவனமாக சிகிச்சை எடுத்து கொண்டால் பிழைக்க வைத்துவிடலாம் என்று சொன்னார்களாம். அவளை உயிர் பிழைக்க வைத்த ஸ்ரீ அன்னைக்கு அநேக கோடி நன்றி சொன்னேன்.

இப்பொழுது ஆயுள் முழுவதும் மருந்து மாத்திரை சாப்பிட வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். இப்பொழுது அவள் குழந்தைக்கு நல்ல தாயாகவும் குடும்பத்திலும் எல்லோரும் சந்தோஷப்படும்படியாக நன்றாக இருக்கிறாள்.

நம் ஸ்ரீ அன்னை அந்த நொடியில் என் பையனுக்கு அந்த அளவுக்கு அறிவை கொடுத்து ஆப்ரேஷனிலிருந்து அவளை விடுவித்து உயிர்பிச்சை கொடுத்தார்கள். இதற்காக இன்று நாங்கள் அனைவரும் ஸ்ரீ அன்னைக்கு ஒவ்வொரு நொடியும் நன்றி சொல்கிறோம். அவளுடைய குழந்தை நல்ல புத்திசாலியாக இருக்கிறாள். அவளுடைய மாமியாரும் என் மகளை தன் மகள் போல அன்பாக வைத்துக் கொள்கிறார்கள். அவள் குடும்பத்தார் அனைவரும் அவளிடம் அன்பாக இருக்கிறார்கள். அவளுக்கு இவ்வளவு சந்தோஷமான குடும்பச் சூழ்நிலையை அமைத்துக் கொடுத்த ஸ்ரீ பகவான் ஸ்ரீ அன்னை அவர்களுக்குக் கோடானு கோடி நன்றியுடன் நமஸ்கரிக்கிறேன்.

மேலும் இந்த இக்கட்டான வறுமையான சூழ்நிலையிலும் என் மகன் நன்றாகப் படிக்கிறான். B.Sc., M.Sc. Bio-Chemistry Major எடுத்து சாஸ்திரா Universityயில் 2008ல் M.Sc. முடித்தான். அடுத்து வேலைக்காக அலைந்தான். வேலையே கிடைக்கவில்லை. சாஸ்திரா யுனிவர்சிடியிலேயே Ph.D. படிப்பதற்காக stipend கிடைக்கும் என்று நம்பி ஒரு கைடிடம் இரண்டு வருடங்கள் Labல் Ph.D. படித்து வந்தான். ஆனால் Registerஆகவும் இல்லை,

stipendம் கிடைக்கவில்லை. Payment Scholarஆக இருந்தால் Register செய்கிறேன் என்று சொல்லிவிட்டார்கள். எனக்கோ கடன் கொடுத்தவர்களிடம் வட்டிக்கு வாங்கி வட்டி கொடுக்கும் சூழ்நிலை. இவன் வேலைக்கும் போகாமல், படிக்கவும் முடியாமல் பைத்தியம் பிடித்தவன் போல அலைந்தான். அவனைப் பார்க்கவே எனக்கு வேதனையாக இருந்தது. அறிவும் திறமையும் இருந்தும் அவன் இப்படிக் கஷ்டப்படுகிறானே என்று மிகவும் கவலையாக இருந்தேன். தினமும் தியானமையத்திற்குச் சென்று அன்னையிடம் முறையிட்டு அழுதேன். 2010ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் திருச்சி பாரதிதாசன் யுனிவர்சிட்டியில் Ph.D.க்கு Bio-Medical Science Departmentஇல் இடம் கிடைத்தது. மாதம் 3000 ரூபாய் stipend கொடுப்பதாக சொல்லி Register செய்து சேர்ந்தான்.

இவனுக்குக் கைடும் மிகவும் நல்ல மனித நேயமுள்ளவராக கிடைத்தார். இதுவும் ஸ்ரீ அன்னை ஸ்ரீ அரவிந்தர் அவர்களின் அருளாசிதான் என ஸ்ரீ அன்னை ஸ்ரீ அரவிந்தருக்கு நன்றி கூறினேன்.

2011 நவம்பர் மாதம் லக்னோவில் இன்டர்நேஷனல் Scientist Conference நடந்தது. என் பையனுடைய கைடு இவனை மிகவும் ஊக்கப்படுத்தி இந்த Conferenceல் கலந்து கொள்ள ஏற்பாடு செய்திருந்தார்கள்.

ஒரு வாரம் நடந்த Conferenceல் என் பையன் செய்து கொண்டிருக்கும் Projectஐ Paper Presentation செய்ய அனுமதித்தார்கள். அதில் என் பையன் செய்த Projectஐ First and Best Project என்று First Prize கொடுத்து Indian Scientist Councilல் Membership ஆக்கி Certificate கொடுத்திருக்கிறார்கள்.

மேலும் இதற்காக 2012 March 26, 27, 28 ஆகிய மூன்று நாட்களும் ஆஸ்திரேலியா அரசாங்கம் என் பையனுக்கு Award கொடுப்பதற்காக அவர்கள் செலவிலேயே என் பையனை



ஆஸ்திரேலியாவுக்கு அழைத்து இருந்தார்கள். என் பையனை இந்த அளவுக்கு உயர்த்திய ஸ்ரீ அன்னை ஸ்ரீ அரவிந்தர் அவர்களின் பாதங்களை என் கண்ணீரால் கழுவி என் நன்றியைத் தெரிவித்து கொள்கிறேன்.

இதற்கிடையில் என் பையனுக்கு வெளிநாடு செல்ல பாஸ்போர்ட் இல்லை. பாஸ்போர்ட்டுக்கு Application கொடுத்திருந்தான். Referenceக்காக என் பக்கத்து வீட்டு பெண்ணின் மொபைல் நம்பர் அவனுக்கு தெரிந்திருந்ததால் அவர்களுடைய சம்மதத்துடன் அவர்களுடைய ரேஷன்கார்டு செராக்ஸையும் மொபைல் நம்பரையும் கொடுத்திருந்தோம். Police விசாரணைக்கு வரும்போது என் பக்கத்து வீட்டுப் பெண்ணை போலீஸ் ஸ்டேஷனில் நேரில் வந்து கையெழுத்து போடச் சொன்னார்கள்.

அந்தப் பெண் நான் போலீஸ் ஸ்டேஷனில் வந்து கையெழுத்து போடமாட்டேன். என் வீட்டில் இதை ஒத்துகொள்ளமாட்டார்கள். போலீஸ்காரர் இங்கு வந்து உங்களை பற்றி விசாரித்தால் இந்தப் பையன் நல்லவன் என்று சொல்வேனே தவிர கையெழுத்து போடமாட்டேன் என்று சொல்லிவிட்டார்கள்.

ஆஸ்திரேலியாவிலிருந்து என் பையனுக்கு வரச் சொல்லி ஆர்டர் வந்து இந்தப் பெண்ணிடம் இந்த ஆர்டரையும் காண்பித்து எவ்வளவோ கெஞ்சியும் போலீஸ் ஸ்டேஷனுக்கு வர முடியாது என்று சொல்லிவிட்டார்கள். போலீஸ்காரரோ அந்த பெண் வந்து இங்கு கையெழுத்து போடாவிட்டால் நான் இந்த பாஸ்போர்ட் அப்ளிகேஷனை கேன்சல் செய்துவிடுவேன் என்று சொல்லிவிட்டார். சரி, இப்பொழுது கொடுத்துள்ள அப்ளிகேஷனை கேன்சல் செய்துவிட்டால் தத்கலில் மறுபடியும் விண்ணப்பித்தால் ஒரு மாதத்திற்குள் வாங்கிவிடலாம். Referenceக்கு வேறு யாரையாவது ஆண்களிடம் கேட்டு கையெழுத்து போடச் சொல்லலாம் என்றால், இந்த விண்ணப்பத்தைப் போலீஸ் ஸ்டேஷனில் கேன்சல் செய்யவும் மிகவும் நாளைக் கடத்தி கொண்டிருக்கிறார்கள்.

திருச்சியில் சென்று புதிதாக தத்கலில் பாஸ்போர்ட்டுக்கு விண்ணப்பிக்கலாம் என்றால், பழைய விண்ணப்பத்தைக் கும்பகோணம், மற்றும் தஞ்சாவூரில் கேன்சல் செய்து, அந்தப் பழைய விண்ணப்பம் திருச்சிக்கு வந்தால்தான் புதிதாக விண்ணப்பிக்க முடியும் என்று மிகவும் கடுமையாக சொல்லிவிட்டார்கள். 2012 பிப்ரவரி 1ஆம் தேதி முதல் இதற்காக திருச்சிக்கும், தஞ்சாவூருக்கும், கும்பகோணத்திற்குமாக தினமும் காலேஜில் லீவு போட்டுவிட்டு மிகவும் அலைந்தான். அதற்கான அதிகாரிகளோ மிகவும் அலட்சியமாக பதில் கூறி திருப்பி அனுப்பினார்கள். ஒரு மாதமாகியும் யாரும் எந்த நடவடிக்கையுமே எடுக்கவில்லை.

நான் கும்பகோணத்தில் உள்ள தியானமையத்திற்குச் சென்று மிகவும் அழுதேன், புலம்பினேன். வீட்டிலும் அன்னையின் படம் முன் உட்கார்ந்து நம் தாயிடம் பேசுவது போல மிகவும் அழுது மன்றாடினேன்.

மார்ச் 6ஆம் தேதி அன்று திருச்சியில் ஒரு ஹோட்டலில் Scientist Conference நடக்க இருந்தது. அந்த functionக்கான முழு organisationம் என் மகன் பொறுப்பில் இவனுடைய கைடு விட்டுவிட்டாராம். மார்ச் 6ஆம் தேதி நடந்த functionல் Chief Guestஆக வந்திருந்தவர் திருச்சி Passport Officerதான். இந்த விபரம் என் பையனுக்குத் தெரியவில்லை. இந்த functionல் வரவேற்புரையிலிருந்து, விருந்து உபசரிப்பிலிருந்து, நன்றியுரை வரை இவன் நின்று செய்ததைக் கவனித்த அந்த Officer இவனை தானாகவே கூப்பிட்டு இங்கு என்ன படிக்கிறாய் என்று கேட்டாராம். அப்பொழுது இவன் தன் படிப்பு விபரத்தைப் பற்றியும், இன்று தான் பாஸ்போர்ட்டுக்காக அலைந்து கொண்டிருப்பதைப் பற்றியும் சொல்லியிருக்கிறான்.

அப்பொழுது அந்த ஆபீசர் படிப்பு விஷயமாகப் போகும் உங்களுக்குப் போலீஸ் விசாரணை தேவையில்லை. என்னுடைய பொறுப்பில் உங்களுக்கு பாஸ்போர்ட் ஏற்பாடு செய்து தருகிறேன்.



நீங்கள் இன்று மாலை 6 மணிக்குத் திருச்சி பாஸ்போர்ட் Officeக்கு வந்து என்னைப் பாருங்கள் என்று சொன்னாராம். பிறகு என்னிடம் போனில் சொன்னான். அப்பொழுது நான் ஸ்ரீ அன்னை தான் அந்த பாஸ்போர்ட் ஆபீசர் உருவில் வந்துள்ளார். உடனே அன்னைக்கு நன்றி சொல் என்று சொன்னேன். பிறகு அவனும் பாஸ்போர்ட் ஆபீசுக்குப் போய் அவரைப் பார்த்ததும், நாளை காலை 10 மணிக்கு மேல் நான் பாஸ்போர்ட்டுக்குக் கையெழுத்துப் போட்டுத் தருகிறேன். 10ஆம் தேதி நீங்கள் உங்கள் வீட்டு விலாசத்திற்கு சென்று பாஸ்போர்ட்டை தபால்காரரிடம் கையெழுத்திட்டு வாங்கிக் கொள்ளலாம் என்று சொன்னாராம். அவர் சொன்னபடியே மார்ச் 10ஆம் தேதி பாஸ்போர்ட் கைக்குக் கிடைத்தது. பிறகு 12ஆம் தேதி விசாவுக்கு விண்ணப்பிக்கச் சென்னை சென்றான். மார்ச் 16ஆம் தேதி விசாவும் கிடைத்துவிட்டது.

என் பையனுக்குப் பாஸ்போர்ட்டும் விசாவும் கைக்குக் கிடைத்தது ஸ்ரீ அன்னை ஸ்ரீ அரவிந்தர் அவர்களின் அருளும், ஆசியும், அன்பும் தான் காரணம் என்பதை என் மகன் முற்றிலும் உணர்ந்தான்.

என் பையனிடம் நீ என்னிடம் கேட்பதைவிட அன்னையிடம் உரிமையோடு அன்போடு ஆசையோடு பேசினால் உனக்கு அருகிலேயே இருந்து, உன் உள்ளுணர்வில் கலந்து, உன் வேலையை முழுமையாக்கி வெற்றி பெற்று தருவார்கள். ஒவ்வொரு செயலுக்கும் அவர்களை அழைத்துக் கொள் என்று சொல்வேன். மார்ச் 25ஆம் தேதி ஆஸ்திரேலியாவுக்குச் சென்று அங்கு நடந்த விழாவில் இவன் செய்த Projectஐ பற்றி Paper Presentation செய்ததில் என் பையனுக்கு India Winner K.Prabhakaran Kumar என்று Certificate கொடுத்துள்ளார்கள். தற்போது Ph.D. முடித்தால் Doctorate பட்டம் தருவார்களாம். இதையடுத்து இவன் ஆஸ்திரேலியாவுக்குக் கிளம்பிய பொழுதே அன்னையிடம் நான் வேண்டிக் கொண்டேன். நீங்களிருவரும் என் பையனுடன் சென்று

அவன் செய்யும் செயல், பேசும் வார்த்தைகள், எண்ணும் எண்ணங்கள், யாவுமே தங்களின் நியதிப்படியும், தங்கள் சங்கல்பத்தின்படியுமே இருக்க வேண்டும். ஒரு நொடிப்பொழுதுகூட அவன் உங்களை விட்டு அகலாதிருக்க வேண்டும். தெரியாத ஊருக்குச் செல்கிறான். நல்லோர்கள் துணையை அவன் நாட வேண்டும். எல்லாருடைய வடிவிலும் தாங்களே இருந்து வழிநடத்த வேண்டும். அவன் ஏற்றுகொண்ட வாய்ப்பை வெற்றி பெற உங்கள் துணையும் ஆசியும் வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன்.

ஸ்ரீ அன்னையும் இந்த விண்ணப்பத்தை ஏற்று அவனுடனேயே இருந்து வழிநடத்தி வெற்றி வாய்ப்பைப் பெற்று தந்தார்கள்.

அதன்படி என் பையனை இன்னும் மேல்படிப்புக்காக ஆஸ்திரேலியாவில் இன்டர்வியூ செய்து PDF (Post Doctorate Fellowship) படிப்புக்குத் தேர்வு செய்துள்ளனர். படிப்பு செலவு, தங்கும் வசதி, எல்லாமே ஆஸ்திரேலிய அரசாங்கமே ஏற்று கொள்வார்களாம். மேலும் stipend தொகையாக ஒரு வருடத்திற்கு ரூ.35,00,000 தருவதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

இந்த வாய்ப்பு என் பையன் மீது ஸ்ரீ அன்னை ஸ்ரீ அரவிந்தர் அவர்கள் வைத்துள்ள மிக அபரிமிதமான அன்பும் அருளாசியும் என்பதை ஒவ்வொரு க்ஷணமும் உணர்கிறேன். அவனை அவர்களிடம் சமர்ப்பணம் செய்துவிட்டேன். அவனை நாங்கள் எதிர்பாராத அளவுக்கு உயர்த்தி, வழிநடத்திய ஸ்ரீ அன்னைக்கு என் ஆயுள் முழுவதும் ஒவ்வொரு நொடியும் நன்றியும் விசுவாசமும் உள்ளவளாக இருப்பேன்.

என் மகளுக்கும் அவளுக்கு வந்துள்ள வியாதி பூரண குணமடைந்து மருந்தில்லா ஒரு வாழ்வை அவள் ஏற்க வேண்டும். ஸ்ரீ அன்னை அவர்களின் அருளாசியினாலும் அன்பாலும் அவளுடைய பூர்வீக இடத்தில் ஒரு பகுதியை விற்றுவிட்டு, அந்த பணத்தில் மீதி உள்ள இடத்தில் தங்களுக்குத் தேவையான அளவுக்கு



ஒரு வீடு கட்டி கொண்டார்கள். அந்த வீடு கட்டியதால் 3 இலட்சம் ரூபாய் கடனுடன் இருக்கிறாள். வட்டிகூட கட்ட முடியாமல் மிகவும் சிரமப்படுகிறாள். அவளுக்கும் ஸ்ரீ அன்னை அவர்கள் ஒரு வழியை காட்டி கடனை அடைத்து அமைதியாக ஆரோக்கியமாக வாழ வழிகாட்ட ஸ்ரீ அன்னையைப் பிரார்த்திக்கிறேன்.

என் வறுமையாலும் என் கணவரின் போக்கினாலும் என்னை மிகவும் கேவலமாக நினைத்தவர்கள் இன்று பிள்ளைகளின் முன்னேற்றத்தைக் கண்டு என்னை மதிக்கத் துவங்கியுள்ளார்கள்.

ஸ்ரீ அன்னையை ஏற்றுக் கொண்டு ஸ்ரீ அன்னையின் வழியே நடந்து கொண்டால் நாம் கேட்பதை விட அதிகமாகவும், அதையும் தக்க தருணத்திலும் நடத்தித் தருவார்கள் என்பதற்கு என் வாழ்வில் நடந்த ஒவ்வொரு நிகழ்ச்சியுமே நல்ல சாட்சி. நாம் நம் வாழ்வில் அன்னையிடம் வருவதற்கு முன் நம் அறியாமையாலும் அவசரத்தாலும் என்ன தவறுகள் செய்திருந்தாலும் அதை மன்னித்து திரும்பவும் தவறு செய்யவிடாமல் தடுத்து நல்வழிப்படுத்துவார்கள் என்பதை நான் ஆதாரபூர்வமாக உணர்கிறேன்.

ஓம் ஸ்ரீ அன்னை ஸ்ரீ அரவிந்தர் அவர்களின் மலர் பாதங்களுக்கு அனந்தகோடி நமஸ்காரங்கள்.

-- நன்றியுணர்வுடன் K. Uma, கும்பகோணம்.

❋❋❋

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

***திரும்பி வந்தால் தீவிரம் உண்டு.***

# வசந்தமே வருக!

வசந்தி சுந்தரம்

*மனிதன் என்பவன் தெய்வமாகலாம்.*
*வாரி வாரி வழங்கும்போது வள்ளலாகலாம்.*
*வாழை போல தன்னைத் தந்து தியாகியாகலாம்.*
*உருகி ஓடும் மெழுகு போல ஒளியை வீசலாம்......*

தூரத்திலிருந்து பழைய திரைப்பட பாடல் காற்றினிலே வரும் கீதமாய் பத்மாவின் செவிகளை வருடிக் கொடுத்தது. சென்னை மாநகரப் பேருந்தின் அன்றாடப் பயணியாகிவிட்ட அவளை பலவிதமான பாடல்கள் ஓசையாகவும் இரைச்சலாகவும் அனுமதியில்லாமல் காதில் நுழைந்து அவஸ்தைப்பட வைத்தாலும், இன்று என்னவோ இப்பாடல் மிக மென்மையாக உண்மையாக ஒலித்தது. பத்மா பல முறை இப்பாடலைக் கேட்டதுண்டு. ஆனால் அப்போதெல்லாம் இந்த வரிகள் ஒரு கவிஞனின் மிகைப்படுத்தப்பட்ட கற்பனையாகத்தான் அவளுக்கு தோன்றும். சொல்லப்போனால், அவள் கேலியாகக்கூட நினைத்ததுண்டு. “ஆமாம், இங்கு மனிதன் மனிதனாக வாழ்வதே பெரும்பாடு. தெய்வமாவதாம்” என்று தனக்குத் தானே அங்கலாய்த்துக் கொள்வாள். ஆனால் இன்று அவள் மனம் இருக்கும் நிலையில் இந்த இதமான தத்துவப்பாடல் ஏதோ message சொல்வது போலிருந்தது.

பஸ்ஸில் ஜன்னலுக்கு அருகாமையில் காற்றோட்டமாய் அமர்ந்திருந்தும் பத்மாவிற்கு ஒரே மனப்புழுக்கம். இன்று தான் போகும் வேலை நல்லபடியாக நடக்க வேண்டுமே என்ற கவலை. அப்படி என்ன வேலை என்றுதானே கேட்கிறீர்கள்? அதற்கு முன் பத்மாவைப் பற்றி ஒரு சில விபரங்கள். ஸ்ரீ அன்னை ஸ்ரீ அரவிந்தரை



தன்னுடைய மானசீக தெய்வங்களாக வரித்து வாழ்க்கை நடத்தி வருபவள் பத்மா. கணவர் ரகுராமன் ஓய்வு பெற்ற officer. பெண்ணும் பிள்ளையும் வெளியூரில் settle ஆகிவிடவே பத்மாவும் ரகுராமனும் சென்னையில் சொந்த வீட்டில் வாசம். பெற்றகரிய அன்னை பக்தியை அவளிடம் வேரூன்றச் செய்தது அவள் அடிக்கடி செல்லும் ஸ்ரீ அன்னை ஸ்ரீ அரவிந்தர் தியான மையமே. பத்மா ஸ்ரீ அன்னை ஸ்ரீ அரவிந்தரிடம் சரண் புகுந்ததிலிருந்து அவள் வாழ்க்கையில் எத்தனை அனுபவங்கள்! எண்ணற்ற அற்புதங்கள்! மாற்றங்கள்! அன்பாகவும் அருளாகவும் பொருட்செல்வமாகவும் அவளை வந்தடைந்தன. இவையெல்லாவற்றிற்கும் காரணம் அன்னை தியான மையம் நடத்துவோரின் வழிகாட்டுதலும் ஆசியும் மட்டுமல்லாது அங்கிருந்து கிடைக்கப்பெற்ற ஆன்மீகப் பொக்கிஷங்களான ஸ்ரீ அன்னை ஸ்ரீ அரவிந்தரைப் பற்றிய புத்தகங்களும் ஆகும். ஸ்ரீ அன்னை ஸ்ரீ அரவிந்தரது வாழ்க்கை வரலாறு, மிக உயர்ந்த அவர்களுடைய கோட்பாடுகள், மனிதகுலத்திற்கு அவர்களால் வழங்கப்பட்டுள்ள புதிய ஆன்மீக வரம், பரிணாமத்திற்காக அவர்களால் செப்பனிடப்பட்டுள்ள புதிய பாதை இவைகளைப் பற்றி அவர்களின் தவப்புதல்வராகவும், அன்னை பக்தர்களுக்கு ஒப்பிலா தந்தையாகவும் விளங்கி அயராது உழைத்து வரும் மகான் ஒருவரால் எழுதப்பட்ட அப்புத்தங்கள் கிடைக்கப்பெற்றது பத்மாவின் வாழ்வில் நடந்த ஆன்மீக அற்புதமாகவும், ஆண்டவனின் அருளாசியாகவும் கருதினாள். ஏனெனில் அகந்தையிலும் இருளிலும் கண்மூடியாக நடந்து கொண்டிருந்த அவள் வாழ்க்கை இப்போது ஒளியை நோக்கிச் செல்ல துவங்கியதற்கு அப்புத்தகங்களே முக்கிய காரணம். அவை வெறும் புத்தகங்கள் அல்ல. இறை அவதாரங்களான ஸ்ரீ அன்னை ஸ்ரீ அரவிந்தரை நம் கண்முன்னே நிதர்சனமாகக் கொண்டுவரும் ஞானக்கருவூலங்கள் என்பதால் பத்மா அப்புத்தகங்களையே ஸ்ரீ அன்னை ஸ்ரீ அரவிந்தராக மதித்து மனதில் இருத்திப் போற்றி வந்தாள். இதனாலேயே, அப்புத்தகங்களைத் தியான மையத்தின் சார்பாக select செய்யும் புத்தகச் சேவையை மேற்கொண்டிருந்தாள்.

ஸ்ரீ அன்னை ஸ்ரீ அரவிந்தர் தனக்கு வாழ்க்கையில் வழங்கியுள்ள எண்ணற்ற ஆசிகளுக்குத் தெரிவிக்கும் ஒரு சிறு நன்றி காணிக்கையாகவும் கிடைத்தற்கரிய அன்னையின் தொடர்பு நீடிக்க உதவும் சந்தர்ப்பமாகவும் கருதி இதனைச் செய்து வந்தாள்.

இந்தப் புத்தகச் சேவை அவளுக்கு அலாதியான மனநிம்மதியையும், உடல்நலத்தையும், சந்தோஷத்தையும் கொடுத்தது. அத்தோடு பல ஆன்மீகப் பரிசுகளையும் அவ்வப்போது வழங்கி வந்தது. அவ்வாறான பரிசு, ஒரு முறை புத்தகச் சேவைக்காக சக தியான மைய அன்பர்கள் இருவர்களுடன் பகவான் ஸ்ரீ அரவிந்தர் அவதரித்த கல்கத்தா மாநகரத்திற்குச் சென்று வந்த அனுபவமாகவும் பாக்கியமாகவும் அமைந்தது. கல்கத்தாவில் பகவான் ஸ்ரீ அரவிந்தர் அன்னை சம்பந்தப்பட்ட புனிதச் சின்னங்களை உயர்ந்த முறையில் போற்றிப் பாதுகாத்து வரும் தியான மையங்களுக்குச் சென்று பரவசம் அடைந்தனர். அங்குள்ள அமைதியும் தூய்மையும் அவர்களை வெகுவாகக் கவர்ந்தன. அதன் பின்னர், பகவான் ஸ்ரீ அரவிந்தர் விடுதலைப் போராட்டக் கைதியாக அலிப்பூர் சிறையில் ஓராண்டு காலம் கழித்த ஒரு மிகச்சிறிய அறையைப் பார்வையிடும் வாய்ப்புக் கிடைத்தது. என்ன ஒரு பாக்கியம்! அது சிறையாகவே பத்மாவுக்கு தோன்றவில்லை. இருள், வறுமை, மரணம், அகந்தை ஆகியவற்றின் பிடியில் சிக்கிக் கர்மத்தால் கட்டுண்டு கிடக்கும் மனிதப் பிறவியை உய்விப்பதற்காகத் தவம் செய்த மகாபுருஷரான ஸ்ரீ அரவிந்தரின் யோகக் கூடமல்லவா அது? காற்றோட்டமில்லாத சிறிய அறையில் காலத்தைக் கடந்த இறைவனின் தரிசனம் கண்ட அந்த மகானின் பொற்பாதங்கள் பதிந்த தரையில் அமர்ந்து 5 நிமிடங்கள் தியானம் செய்தனர். மெய்சிலிர்க்க வைத்த அந்த அனுபவம் என்றும் அவள் நினைவில் வாடாமலராக பரிமளித்தது. புத்தகச் சேவையில் கிடைத்த இந்த ஸ்ரீ அரவிந்த தரிசனம் அவள் அடைந்த உன்னத ஆன்மீகப் பரிசு என்பதில் ஐயமில்லை.

இதே புத்தகச் சேவை எனும் புனித வேலைக்காகத்தான் பத்மா பேருந்தில் பயணித்துக் கொண்டிருந்தாள். தினமும் இதுபோல் பத்மா



அன்றாட வீட்டு வேலைகள் முடித்து மதிய உணவுக்குப் பின்னர் கிளம்பி நகரத்தில் உள்ள அலுவலகம், வங்கி, பள்ளிகள், வீடுகள் போன்ற இடங்களுக்குச் சென்று ஆர்வம் உள்ளவர்களை அணுகி Book sales செய்து வந்தாள். அவளுடைய கணவன் ரகுராமனும் அவளுக்கு இந்தச் சேவையில் ஊக்கமளிக்கும்வண்ணம் எல்லாவிதத்திலும் உதவி வந்தார். இதற்காக பத்மாவுக்குச் சிறிதும் தயக்கமின்றி பணம் கொடுத்து அனுப்புவார். அவரே பேருந்து நிலையத்திற்குத் தன்னுடைய TVS வண்டியில் அழைத்துச் சென்று வழி அனுப்புவார். இவ்வாறு உயர்ந்த முறையில் அன்னையின் அருளால் நடந்து கொண்டிருந்த சேவைக்குப் புறப்பட்டுச் சென்று கொண்டிருந்த பத்மாவுக்கு இன்று என்னவாயிற்று? ஆனந்தத்தின் அமுத ஊற்றான அன்னை சேவைக்குச் செல்லும் அவளுக்கு ஏன் குழப்பம், கவலை?

கிளம்புவதற்கு முன் நடந்த விபரீதம்தான் அதற்குக் காரணம். எல்லாம் அந்த மூன்றெழுத்தால் வந்த வினை. மூன்று எழுத்துகள் எப்படி வேலைக்கு முட்டுக்கட்டையானது என்று தோன்றலாம். முரண்பாட்டை விளைவிக்கும் அந்த மூன்றெழுத்து நம் குணக்கேட்டால் ஏற்படும் ‘சண்டை’ என்ற வேண்டாத விருந்தாளிதான். அன்பு, அமைதி, அருள், வெற்றி போன்ற பல மூன்றெழுத்துத் தேவர்கள் இருக்கும்போது, கோபம், கடுமை, சண்டை என்ற அசுரர்களிடம் சரணடையும் நம்முடைய அறிவீனம்தான் என்ன? பத்மாவும் அன்று அப்படிப்பட்ட பலவீனத்திற்கு அடிமையாகிவிட்டாள். புத்தக ஞானம் முக்கியமான தருணங்களில் புத்தியிலிருந்து விலகிப் போய்விடுகிறது. உணர்ச்சி மேலோங்கி நிற்கிறது. படித்தால் மட்டும் போதுமா? அறிவு சத்தியம் என்று புரிந்து கொண்டதை உணர்வும் ஏற்று செயல்படுத்த சம்மதிக்க வேண்டுமே. அங்குதான் தகராறு பத்மாவுக்கு.

விஷயம் இதுதான். பத்மாவின் கணவர் ரகுராமனுக்கு T.V.யில் ஆங்கிலப் படங்கள் பார்ப்பது பிடித்தமான பொழுதுபோக்கு. எதையும் ஈடுபாட்டுடனும், உன்னிப்பான கவனத்துடனும் செய்யும்

ரகுராமன் T.V. பார்ப்பதிலும் அவ்வாறே. கண்ணியமானவர்தாம். தரக்குறைவாக எதையும் பார்ப்பவரில்லை. ஆனால் இந்த ஆங்கிலப் படங்கள் என்றாலே பத்மாவுக்கு அலர்ஜி. இப்படி இருக்க, அன்று சமையலறையில் மும்முரமாக இருந்த பத்மா அங்கிருந்தபடியே ஹாலில் T.V. பார்த்துக் கொண்டிருந்த ரகுராமனிடம், "காலையிலிருந்து பால்கார்டைக் காணவில்லை. தேடிக் கொண்டிருக்கிறேன். எங்காவது பார்த்தீர்களா?" என்று கேட்டு வைக்க, அதற்குப் பதிலையே காணோம். ரகுராமனுக்கு தான் கேட்ட கேள்வி காதில் விழவில்லை போலிருக்கிறது என்று நினைத்த பத்மா அருகில் வந்து மறுபடியும் அதே கேள்வியை சற்று உரத்த குரலில் கேட்க, ரகுராமனுக்கு வந்ததே கோபம், அதுவும் T.V.யில் ஒரு ஆங்கிலப் படத்தில் வழக்குமன்ற விவாதக் காட்சி ஒளிபரப்பாகிக் கொண்டிருந்தது. சுவாரஸ்யமான கட்டத்தில் இங்கிதமில்லாமல் இடைஞ்சலாக வந்து நின்ற பத்மாவின் கன்னத்தில் அறை விடாத குறையாக ரகுராமன் கோபத்தில் முறைக்க, அதைப் பார்த்த பத்மா, "இப்ப என்ன ஆயிற்று என்று இப்படி முறைக்கிறீர்கள்? பால் கணக்கு போட்டுவிட்டு கார்டைக் கை மறதியாக வைத்துவிட்டேன். அதைப் பார்த்தீர்களா என்றுதானே கேட்டேன். அதற்கு என்னமோ பகையாளியைப் பார்ப்பது போல் பார்க்கிறீர்களே. அப்படி என்ன T.V.? அதைப் பார்க்காமல் இருந்தால் குடியா முழுகிவிடும்?" என்று கேட்டுவிட்டாள்.

அவ்வளவுதான், "அதைச் சொல்வதற்கு நீ யார்? உனக்கு எப்பொழுதுமே நான் T.V. பார்க்கும்போதுதான் எல்லாம் ஞாபகம் வரும்" என்று பதிலடி கொடுக்க, இப்படியே வாக்குவாதம் தொடர்ந்து சண்டையில் முடிந்தது. சண்டைக்குப் பின் சமாதானம் வந்ததோ இல்லையோ, silence வந்தது. மதிய உணவு மௌனக்காட்சி போல் நடந்து முடிந்து அரைகுறையாகக் கணவரிடம் விடைபெற்றுக் கொண்டு படபடப்போடு புத்தகப் பையை தூக்கிக் கொண்டு பத்மா கிளம்பினாள்.

இதுவே பத்மாவின் மன உளைச்சலுக்குக் காரணம். கணவர் ரகுராமன் ஆங்கிலப் படங்கள் அடிக்கடி பார்ப்பது பத்மாவுக்கு



பிடிக்காத ஒன்று. அவளுடைய கணிப்பில் முக்கால்வாசி ஆங்கிலப் படங்கள் வன்முறைக் காட்சிகளையே அதிகம் சித்தரிக்கின்றன. விறுவிறுப்பு என்ற பெயரில் துப்பாக்கிச் சூடு, மோதல், வழக்குமன்ற விவாதங்கள் இவைகளே அதில் பிரதானம். இவைகள் நம் மனச் சாந்தியை குலைக்கும் என்பது அவள் முடிவு. ஆனால் ரகுராமனோ, "என்னுடைய relaxationக்கு நான் ஏதோ பார்த்துவிட்டுப் போகிறேன். ஆங்கிலப் படங்களும் நல்ல கருத்துகளை அவர்கள் முறையில் சொல்கின்றன. என்னை ஏன் control செய்கிறாய்? உனக்குப் பிடிக்கவில்லை என்றால் நீ பார்க்காதே" என்ற கட்சி. கருத்து வேறுபாடு மோதலாகிச் சட்டசபையின் அவைக் கலைப்புக்கு ஈடாகிவிட்டது.

பத்மா இறங்க வேண்டிய bus stopக்கு இன்னும் இரண்டு நிறுத்தங்கள் இருந்தன. திடீரென்று பத்மாவுக்குக் கொஞ்சம் தள்ளி நின்று கொண்டிருந்த இரு பயணிகளுக்கு நடுவே இடப் பற்றாக்குறை காரணமாக ஒரு முணுமுணுப்பு ஆரம்பித்தது. சில நிமிடங்களில் அது வலுப்பெற்று கோபமான பேச்சு வார்த்தையாகி, பின்னர் காட்டுகத்தலாகி, conductor வந்து சமரசம் செய்ய முடியாமல், ''இரண்டு பேரும் பேசாமல் இருக்கிறீர்களா? இல்லை இறக்கிவிடட்டுமா?" என்று ஒரு போடு போடவும் அமைதியாயினர். இந்தச் சமயத்தில் பத்மாவின் stop வந்துவிடவே அவள் இறங்கிக் கொண்டாள்.

இறங்கி நடந்து கொண்டிருந்த பத்மாவின் மனதில் தன் வீட்டில் நடந்த நிகழ்ச்சிக்கும் பஸ்ஸிலிருந்து இறங்கு முன் நடந்த சம்பவத்திற்கும் ஏதோ தொடர்பு இருப்பதாக உள்ளுணர்வு கூறியது. அதை ஒதுக்கி ஓரங்கட்டிய பத்மா, அவள் சேர வேண்டிய மின்சார வாரிய அலுவலகம் நெருங்கவே அதில் நுழைந்து தன்னுடைய புத்தக சேவைக்கு தயாரானாள்.

அந்த அலுவலகத்தில் மிக ஆர்வத்துடன் ஸ்ரீ அன்னை ஸ்ரீ அரவிந்தர் பற்றிய புத்தங்கள் வாங்குபவர்கள் நிறைய பேர்

பணிபுரிந்து வந்தனர். 2 அல்லது 3 மாதங்களுக்கு ஒரு முறை அங்கு சென்று புத்தக சேவை செய்வாள். இந்த முறை ஏதாவது புது book வந்திருக்கிறதா? என்று அவர்களே ஆர்வத்துடன் கேட்டு, அவர்களிடம் இல்லாத புத்தகங்களை வாங்கிக் கொள்வார்கள். அன்று என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. வழக்கமாக புத்தகம் வாங்கும் நபர்களில் 3, 4 பேர் லீவு. மற்ற இருவர் meetingல் இருந்தனர். சரி, 6th floorல் வேலை பார்க்கும் ஹேமலதா என்ற பெண்மணியைப் பார்ப்போம் என்று அங்கு சென்று பார்த்தால் அவர் மிகவும் depressedஆக இருந்தார். “Madam இன்று வீட்டில் ஒரே பிரச்சனை. மனதுக்கு நிம்மதியே இல்லை. இன்னொரு நாள் வாங்கிக் கொள்கிறேனே” என்றார். கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் எல்லா தளங்களிலும் முயற்சித்தும் ஒரு அன்னை புத்தகமும் sales ஆகாமல் மனம் தளர்ந்தாள் பத்மா. “Mother இன்று என்ன ஒரு book கூட விற்பனையாகவில்லையே” என்று கவலையுடன் கண்ணை மூடி பிரார்த்தனை செய்யத் தொடங்கினாள் பத்மா. எந்தப் பிரச்சனையை தீர்த்து வைக்கவும் அவளுக்கு அன்னைதானே துணை.

மூடிய கண்களின் முன்னால் அன்னைக்கு பதிலாக கணவர் ரகுராமனின் உருவம்தான் தோன்றியது. அவருடன் காலையில் நடந்த தகராறு பத்மாவின் மனக்கண்முன் ஒவ்வொரு sceneஆக T.V. காட்சி போல் வரத் தொடங்கின. காட்சிகளின் அணிவகுப்பு முடிந்தபின் பத்மாவின் உள்ளுணர்வு எங்கோ தவறு இருப்பதாக சுட்டிக்காட்டியது. சற்று மனதை அமைதிப்படுத்திக் கொண்டு நடுநிலைமையுடன் வீட்டில் நடந்த நிகழ்ச்சியை சீர்தூக்கிப் பார்த்தாள். அன்னைக்குப் பிடிக்காத ஒரு காரியத்தை தான் செய்துவிட்டதாக உணர்ந்தாள். அதனால்தான் அன்று தன்னுடைய புனிதமான பணியில் இடையூறு ஏற்பட்டிருக்கிறது என்று புரிந்து கொண்டாள். ஆமாம், ஒரு சின்ன விஷயம் கசப்பான சண்டையாக நான்தான் காரணமாகிவிட்டேனோ? காலையில் கூட ரகுராமன் ஜோக் அடித்து சிரித்துப் பேசிக் கொண்டிருந்தார். பிறகு கிளம்பும் சமயத்தில் எல்லாம் மாறிவிட்டது. ஏற்கனவே எனக்கு அவருடைய ஆங்கிலப் படங்கள்



பார்க்கும் பழக்கத்தின் மீதிருந்த மனக்குறை ஒரு சிறிய விஷயத்தின் மூலமாக வெளியே சீறிக்கொண்டு வருவதற்கு வாய்ப்பு தேடிக் கொண்டிருந்தது போல் அல்லவா இருக்கிறது? Mother, நான்தான் தவறு செய்துவிட்டேன். எனக்குப் பிடிக்கவில்லை என்பதற்காக அவருடைய பழக்கத்தை இடித்துக் கூறிவிட்டேன். வாக்குவாதத்திற்கு இடம் கொடுத்ததினால் அவர் கோபம் வளர்ந்து கொண்டே போனது. ஸ்ரீ அன்னை ஸ்ரீ அரவிந்தரின் கொள்கைப்படி ‘‘மற்றவர்க்கு சொல்வதற்கு இங்கு எதுவுமில்லை. யாரையாவது திருத்த வேண்டுமென்றால் அது நம்மைத்தான்”. அதுவும் அன்னை சேவையில் ஈடுபட்டுள்ள நான் கோபத்திற்கு அடிமையாகி வாய்ச் சொல்லால் மற்றவரை புண்படுத்துவது எவ்வளவு தவறு! தீர யோசித்துப் பார்த்தால் அவருடைய பழக்கத்தின் மீது எனக்குள் புகைந்து கொண்டிருந்த கோபம்தானே சண்டை எனும் தீ பற்றி எரிய காரணம். அந்தக் கோபமே ஒரு violent emotionதானே? இப்படி எனக்குள்ளே கோபம் என்னும் வன்முறையை வைத்துக் கொண்டு அவரை வன்முறையைப் பார்க்காதீர்கள் என்று சொல்வதில் அர்த்தமில்லை. என்னுடைய அகம்தானே புறமாகிக் கொண்டிருக்கிறது? என்னை இப்போது எங்கு கொண்டு வந்துவிட்டது? நானல்லவா இப்போது அன்னையின் கொள்கைக்கு புறம்பானவளாக இருந்திருக்கிறேன். என்ன புத்தகம் படித்து என்ன? தன்னுடைய கருத்தில் பிடிவாதமாக இருந்து தன்னைத் தானே வலியுறுத்தும் வரை எந்த ஆன்மீகமும் நமக்கு உதவ முடியாது என்று சட்டென்று பத்மாவுக்குப் புரிந்தது. "Mother என்னுடைய தவற்றை நான் உணர்ந்துவிட்டேன். இன்று வீட்டிற்குத் திரும்பியவுடன் அவரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். இனி இதுபோல் நடந்து கொள்ள மாட்டேன். என்னுடைய இந்த முடிவுக்குத் தேவையான பொறுமையையும் மன உறுதியையும் தாங்கள்தான் எனக்குத் தர வேண்டும். அன்னையே உங்களுக்காக நான் இதைச் செய்கிறேன்” என்று ஐந்து நிமிடம் கண்களை மூடி பிரார்த்தனையில் ஈடுபட்டாள். அன்னையை அழைத்துக் கண்கள் பனிக்க அவள் மன்றாடி முடித்த நேரம் யாரோ

அவளைத் தோளில் தட்டி எழுப்பினார்கள். சட்டென்று சுயநினைவுக்கு வந்த பத்மாவின் முன்னால் meeting முடிந்து திரும்பிக் கொண்டிருந்த இரு பெண்மணிகள் சிரித்த முகத்துடன் நின்றிருந்தனர். “என்ன Madam, வெகுநாட்களாக உங்களைக் காணவில்லை? உங்களைப் பற்றித்தான் இன்று பேசிக் கொண்டிருந்தோம். அன்னை books கொஞ்சம் தேவைப்படுகிறது”. பத்மாவுக்கு அவர்களுடைய சொற்கள் காதில் தேனாக இனித்தன. உடனே தன்னிடமுள்ள books எல்லாவற்றையும் அங்குள்ள table மீது வைத்துக் காண்பித்தாள்.

‘‘எங்களுடைய சிநேகிதி ஒருவருக்கு இரண்டு நாளில் marriage day. அவரும் ஒரு அன்னை devotee. அதனால் 2 புத்தகங்கள் giftஆக கொடுக்கலாம் என்று நினைத்தோம். சரியான சமயத்தில் வந்தீர்கள். எங்களுக்கும் புதிதாக “யோக சக்தி வாழ்வில் பலிக்கும் முறைகள்’’ என்ற புத்தகம் வந்திருக்கிறதாமே, அது வேண்டும்” என்று சொல்லி, ஆளுக்கு இரண்டு புத்தகங்களாக 4 books வாங்கி கொண்டார்கள். புதிதாக charge செய்யப்பட்ட mobile phone போல புத்துணர்வு பெற்ற பத்மா அன்னையின் அருள் விரைவுக்காக மனதிற்குள் நன்றி சொல்லியவண்ணம் அந்த அலுவலகத்தை விட்டு வெளியில் வந்து அதற்கு அருகாமையில் இருந்த ஒரு வங்கிக்குள் நுழைந்து அங்குப் பணிபுரியும் கீதா என்பவரை நெருங்கினாள். கீதாவும் பத்மா மூலமாக அன்னையைப் பற்றி தெரிந்து கொண்டு புத்தகங்கள் விரும்பி வாங்கிக் கொண்டு மற்ற bank staff வாங்குவதற்கும் காரணமாக இருக்கும் ஒரு புது devotee.

பத்மா வருவதற்காகவே காத்திருந்தது போல் கீதா, “Madam, இதே சாலையில் இருக்கும் LIC Office branchல் வேலை பார்க்கும் அனுராதா என்பவருக்கு ஸ்ரீ அன்னை ஸ்ரீ அரவிந்தர் பற்றிய புத்தகங்கள் தேவைப்படுகிறதாம். உங்களால் போக முடியுமா?” என்று கேட்டார். “முடியுமாவா? அதற்காகத்தானே வந்திருக்கிறேன்” என்ற பத்மா, உடனே ஒரு auto வைத்துக் கொண்டு அந்த officeஐ அடைந்தாள்.



மகிழ்ச்சியுடன் பத்மாவை வரவேற்ற அனுராதா என்ற அந்தப் பெண்மணி தனக்கு ஸ்ரீ அன்னை ஸ்ரீ அரவிந்தர் பற்றி படித்து தெரிந்து கொள்ள மிகுந்த ஆர்வம் இருப்பதாகவும், புத்தகங்கள் இதுவரை வாங்கும் சந்தர்ப்பம் அமையவில்லை என்றும் கூறி, “அன்னையின் தரிசனம்”, “அருளமுதம்”, “புஷ்பாஞ்சலி” என்ற மூன்று புத்தகங்களை உடனே வாங்கிக் கொண்டார். அனுராதா bookஐத் தேர்வு செய்து கொண்டிருக்கும்போதே அருகில் வேலை பார்த்துக் கொண்டிருந்த 4, 5 பெண்கள் அங்கு வந்து பத்மா display செய்து வைத்திருந்த ஸ்ரீ அன்னை ஸ்ரீ அரவிந்தர் புத்தகங்களை ஆவலோடு பிரித்து பார்வையிட்டனர். அது அவர்களுடைய பார்வையல்ல, ஸ்ரீ அன்னையின் அருட்பார்வையே என்பதை பத்மா விரைவில் உணர்ந்தாள். ஏனெனில் அவர்கள் எல்லோரும் சேர்ந்து 5 புத்தகங்கள் வாங்கிக் கொண்டனர். இதைவிட வேறு எப்படி ஸ்ரீ அன்னை பத்மாவுக்குத் தன்னுடைய presenceஐ உணர்த்தியிருக்க முடியும்? மிக்க மகிழ்ச்சியுடனும், மனநிறைவுடனும் பத்மா அந்த அலுவலகத்திலிருந்து வெளியேறி bus standஐ நெருங்கினாள். Busம் உடனே வந்தது. ஆனால் அதில் ஏறி அமர்ந்த பத்மாவுக்கு அது busஆகத் தெரியவில்லை. ஏதோ தேவலோக ஊர்தி ஒன்று தன்னைச் சுமந்து கொண்டு காற்றினில் மிதந்து செல்வதைப் போல் உணர்ந்தாள். தெய்வீக மாயையால் தான் இயக்கப்படுவதைப் போல் தோன்றியது. இது என்ன விந்தை? அன்றாடம் விற்கும் 4, 5 புத்தகங்கள்கூட விற்க முடியாமல் போன நிலை மாறி, சில நிமிடங்களில் 12 புத்தகங்கள் விற்கும்படி செய்த ஸ்ரீ அன்னையின் அருள் விரைவு பத்மாவை வியக்க வைத்தது. இந்த sudden turn of events எதனால் என்பதும் அவளுக்குத் தெளிவாகத் தொடங்கியது. தன் தவற்றை உண்மையாக உணர்ந்து ஸ்ரீ அன்னையிடம் சமர்ப்பித்து, இனி அந்தத் தவற்றை செய்வதில்லை என்ற முடிவு எடுத்தவுடன் book sales அற்புதமாக நடந்தது. அகத்தில் ஏற்பட்ட மாற்றம் புறத்தில் விளைவித்த புரட்சியே அது என்பது புலனாயிற்று. புறம் அகமானால் யுகம் க்ஷணமாகும் என்பது இதுதான் போலிருக்கிறது.

எந்த உயர்ந்த ஞானமும் நாம் அதை வாழ்க்கையில் கடைப்பிடிக்கும்போதுதான் அர்த்தமுள்ளதாகிறது. சத்தியத்தின் சொரூபமான ஸ்ரீ அன்னைக்காக நாம் இதைச் செய்யும்போது அது நம்மைத் தெய்வீக நிலைக்கு உயர்த்துகிறது. மனமாற்றம் பெறும் நேரம் புனித நேரம். அப்போது நாம் ஸ்ரீ அன்னையின் கருவியாகிறோம். இதைவிட உயர்ந்த பரிசில்லை. இதற்கு ஈடான மகிழ்ச்சியோ நிறைவோ இல்லை என்று உணர்ந்த பத்மாவுக்குக் காலையில் கேட்ட பாடல் வரிகளும் தனக்கு இந்த messageஐத்தான் உணர்த்தியதாகப் புரிந்து கொண்டாள். மனதில் தெளிவும் அமைதியும் நிரம்பியவண்ணம் வீட்டை நோக்கி ஸ்ரீ அன்னைக்குக் கொடுத்த வாக்கை நிறைவேற்ற விரைந்தாள் பத்மா.

அவள் தீர்மானித்துவிட்டாள். மனம் கசங்கும் மல்யுத்தங்கள் இனி அவளுக்கு வேண்டாம். சுமுகத்தின் சுகந்தம் வீசும் வசந்த கால பயணமே அவள் இலக்கு. ஸ்ரீ அன்னையை அங்குதானே காண முடியும்!

*முற்றும்.*

❋❋❋

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

***உள்ளது போனால் உலகம் வரும்.***

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

***மனம் சரணாகதிக்குத் தடை.***



# Infinityயினுடைய ஆற்றல் (பாகம் 1)

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

N. அசோகன்

இப்படி Overmindஉடன் ஒப்பிடும்பொழுது மானிட அறிவின் capacity for Infinity குறைவு. ஆனால் அதே சமயத்தில் நம்முடைய அறிவிற்கும் கீழேயுள்ள உணர்வு நிலை அதாவது vital planeஉடன் ஒப்பிடும்பொழுது Human mindஉடைய capacity for Infinity அதிகம். அறிவு வளர்ச்சியில்லாமல் வெறும் உடம்பையும் உணர்வுகளையும் வைத்துக் கொண்டு விவசாயம் மற்றும் வியாபாரம் மற்றும் போரிடுதல் என்று இவற்றை மட்டும் செய்து கொண்டு வாழ்ந்த மனிதன் சாதித்ததை விட, விஞ்ஞானம் மற்றும் technology வளர்ந்தபின்பு நாகரிக வளர்ச்சியடைந்த மானிட இனம் சாதித்தது மிகவும் அதிகம். இம்மாதிரியே நம் அறிவுக்குக் கீழ் உள்ள உணர்வு நிலையை எடுத்துக் கொண்டால் நம் அறிவினுடைய capacity for Infinityஐ விட இதனுடைய capacity for Infinity குறைவு. அதே சமயத்தில் நம்முடைய உடம்போடு ஒப்பிடும்பொழுது இதனுடைய capacity for Infinity அதிகம். தன்னுடைய உடம்பையும் மற்றும் தன்னுடைய இரு கைகளை மட்டுமே கருவிகளாகக் கொண்டு மிருகங்களை வேட்டையாடியும், தானியங்கள் மற்றும் பழங்கள், காய்கறிகள் ஆகியவற்றைச் சேகரித்தும் சாப்பிட்டு வாழ்ந்த காட்டு மனிதனை விட உணர்வு மையத்தை வளர்த்துக் கொண்ட, பெரிய அறிவு வளர்ச்சி இல்லையென்றாலும் விவசாயம் மற்றும் வியாபாரத்தைச் செய்து உணர்வு நிலையில் வாழ்ந்த மனிதன் சாதித்தது அதிகம். உடம்போடு ஒப்பிடும்பொழுது உணர்வின் ஆற்றல் அதிகமாகத் தெரிகிறது. ஆனால் அறிவோடு ஒப்பிடும்பொழுது உணர்வின் ஆற்றல் குறைவு. ஏனென்றால் அறிவின் பார்வை அகன்றது. உணர்வின் பார்வை குறுகியது. ஆத்திரக்காரனுக்கும், ஆசை கொண்டவனுக்கும் அறிவு மட்டு என்பார்கள். அவனுக்கு அவனுடைய ஆத்திரமும், ஆசையும் தான் தெரியுமே ஒழிய அந்த

நேரம் அறிவு வேலை செய்யாது. ஆகையால் ஆசையாலும், ஆத்திரத்தாலும் உந்தப்பட்டு செயல்படுபவன் அறிவால் செயல்படுபவனிடம் என்றுமே தோற்றுப் போவான். உதாரணமாக இரண்டாம் உலகப்போரை பெரிய சாம்ராஜ்யம் நிறுவ வேண்டும் என்ற ஆசையால் உந்தப்பட்டு ஹிட்லரும், முசோலினியும் பிரான்ஸ், இங்கிலாந்து மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளின் மேல் போர் தொடுக்கத் தொடங்கினர். ஆரம்பத்தில் வெற்றி கிட்டினாலும் அமெரிக்காவினுடைய பணபலம் மற்றும் படைபலம் இவர்கள் கண்ணுக்குத் தெரியாமல் போய்விட்டது. இந்தப் பணபலத்தையும் படைபலத்தையும் அமெரிக்காவும் மற்றும் நேச நாடுகளும் ஜெர்மனி மற்றும் இத்தாலி மற்றும் ஜப்பானுக்கு எதிராகப் பயன்படுத்தியபொழுது மூன்று நாடுகளும் படுதோல்வியடைந்தன. ஜெர்மனி இரண்டு துண்டாகியது. ஜப்பானில் அணுகுண்டு வெடித்தது. ஏன் இந்தப் போரில் இறங்கினோம் என்று ஜெர்மானியர்களும் இத்தாலியர்களும் மற்றும் ஜப்பானியர்களும் பல வருடங்களாக வருத்தப்பட்டார்கள். அறிவின் வரம்பற்ற ஆற்றலோடு உணர்வு மற்றும் உடம்பு நிலையில் செயல்படுகின்றவர்களுடைய வரம்பிற்குட்பட்ட ஆற்றல் மோதும்பொழுது இப்படிப் படுமோசமான விளைவுகளைச் சந்திக்க வேண்டியிருக்கிறது.

இறுதியாக நாம் physical planeக்கு வருகிறோம். இருப்பதிலேயே மிகவும் ஆற்றல் குறைந்த plane என்பதால் இதனுடைய capacity for Infinityயும் அந்தளவு குறைவாகத் தான் இருக்கிறது. குறைவாக இருந்தாலும் physical Infinity கூட நமக்குப் பிரம்மாண்டமாகத் தான் தெரிகிறது. உதாரணமாக எந்த telescopeஆலும் பிரபஞ்சத்தின் எல்லையைப் பார்க்க முடியாத அளவிற்குப் பிரபஞ்சம் பிரம்மாண்டமாக இருக்கிறது. பகவான் பிரபஞ்சத்தை முடிவில்லாத finite என்கிறார். பிரபஞ்சத்தின் அளவிற்கு வரம்பு கிடையாது என்பதைப் போல physical planeல் காலத்தின் வெளிப்பாட்டிற்கும் அளவு கிடையாது. காலத்தையும் பகவான் Time



Eternity என்றும் Timeless Eternity என்றும் இரண்டாகப் பிரிக்கிறார்.

இம்மாதிரியே பிரபஞ்சத்தின் அளவு மற்றும் வயது என்று இவற்றை தவிர physical planeல் வேறு எதை எடுத்துக் கொண்டாலும் எல்லாமே வரம்பிற்குட்பட்டவையாகவே இருக்கும். பூமியின் இயற்கை வளத்தை எடுத்துக் கொண்டால் அதற்கு ஒரு லிமிட் உண்டு. பூமிக்கு அடியில் இருந்து நாம் நிலக்கரி மற்றும் எண்ணெயை எடுத்துச் செலவு செய்து கொண்டிருக்கிறோம். இவை தீராமல் எப்போதுமே கிடைத்துக் கொண்டிருக்குமென்று சொல்ல முடியாது. இப்பொழுது நாம் இவற்றைப் பயன்படுத்தும் அளவிற்குத் தொடர்ந்து பயன்படுத்தினோம் என்றால் இவை இன்னும் 100 வருடம் தான் நீடிக்கும், அதற்கு மேல் நீடிக்காது என்று நிபுணர்கள் சொல்கிறார்கள். மனிதனுடைய சம்பாத்தியம் மற்றும் சொத்து ஆகியவற்றிற்கும் அளவுண்டு. Bill Gates போன்ற கோடீஸ்வரர்களுடைய Asset figureஐ எடுத்துக் கொண்டால் கூட அதிகபட்சமாக 50 billion dollars என்று சொல்கிறார்கள். ஒரு பில்லியன் என்றால் 4500 கோடியாகும். 50 பில்லியன் என்றால் 2,25,000 கோடி ரூபாயாகும். உலகத்தினுடைய மொத்த financial assetsஐ எடுத்துக் கொண்டால்கூட, 2010ஆம் ஆண்டு அக்டோபர் மாத கணக்கெடுப்பின்படி பார்த்தால் சுமார் 195 Trillion dollars என்று பொருளாதார நிபுணர்கள் சொல்கிறார்கள். ஒரு Trillion என்றால் 1000 billion ஆகும். ஆகவே 195 trillion என்றால் 1,95,000 பில்லியன் என்றாகும். இந்த எண்ணிக்கை நமக்குப் பிரமிப்பாக இருந்தாலும் இது ஒரு அளவிற்குள் தான் வருகிறது. மனிதனுடைய ஆயுளை எடுத்துக் கொண்டால் கூட 100 வயதிற்கு மேல் பொதுவாக இருப்பதில்லை. ஓய்வெடுக்காமல் எந்த மனிதனாலும் நாள்கணக்காக வேலை செய்ய முடியாது. பெரும்பாலானவர்கள் 8 மணி நேர வேலைக்குப் பிறகு களைத்துப் போய் ஓய்வெடுக்க வேண்டும் என்ற நிலையில் தான் இருக்கிறார்கள். உடம்பினுடைய

capacity for Infinity எவ்வளவு குறைவு என்பது அறிவினுடைய capacityஐ ஒப்பிட்டுப் பார்த்தால் தான் நமக்குத் தெளிவாகத் தெரியும். உதாரணமாகப் படிப்பில்லாமல் unskilled வேலை செய்கின்ற தொழிலாளர்களை எடுத்துக் கொண்டோம் என்றால் அவர்கள் அதிகபட்சமாக ஒரு நாளைக்கு 250-300 ரூபாய் தான் சம்பாதிக்கிறார்கள். ஒரு நாள் வருமானத்தை 250 ரூபாயாக வைத்தால், நான்கு ஞாயிறு போக ஒரு மாதத்தில் 26 நாட்கள் வேலை செய்தால் ஒரு மாத வருமானம் 6500 ரூபாய் அல்லது 7800 தான் வருகின்றது. ஆனால் அறிவை நம்பி உழைக்கின்றவர்களைப் பார்த்தால் அது மிக உயர்ந்த அளவில் இருக்கும். அமெரிக்காவில் இருக்கின்ற Tom Peters மற்றும் Peter Drucker போன்ற management நிபுணர்களுடைய ஒரு நாள் சம்பளத்தை எடுத்துக் கொண்டோம் என்றாலும் அது 80,000 டாலர்கள் மற்றும் 1 இலட்சம் டாலர்கள் அளவில் இருக்கிறது. இந்திய ரூபாயில் பார்த்தால் ஒரு நாள் வருமானம் ரூ.36,00,000 முதல் ரூபாய் 45,00,000 வரை என்றாகிறது. அறிவில்லாத தினக்கூலிக்கு அவனுடைய உடல் உழைப்புத் தருவது வெறும் 250 ரூபாய் தான். Management துறையில் தம்முடைய அறிவு பலத்தால் முதன்மை இடத்தில் நிற்பவருக்கு அவருடைய அறிவு வழங்கும் தினசரி வருமானம் ரூ.36,00,000 முதல் ரூ.45,00,000. இந்த வருமானம் சம்பந்தப்பட்ட figureஐ வைத்துக் கொண்டே உடம்பின் ஆற்றல் என்ன, அறிவின் ஆற்றல் என்ன என்று நாம் புரிந்து கொள்ளலாம்.

*தொடரும்....*

❋❋❋

Published by Mr. P.V. Sankar on behalf of The Mother's Service Society, No.5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011, Printed by Mr. S. Devanathan at Sakthi Offset Printers, No.238, Lawspet Main Road, Pakkamudayanpet, Puducherry - 605008, Published from Flat No.11, 2nd Floor, Grace Apartments, No.177, Papammal Koil Street, Vaithikuppam, Puducherry - 605012, Editor: Mr. N. Asokan, Secretary, The Mother's Service Society, No.5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011.

# பழம்பெரும் எழுத்தாளர் வ.ரா.

1910ற்கு முன் திருச்சியில் வடக்கேயிருந்து ஒரு யோகி தென்னாட்டுக்கு வருகிறார். அவரை அவர் பிரகடனப்படுத்தும் மூன்று பிரதிக்ஞைகளினின்று அறியலாம் என்றார். அவரை உத்தர யோகி என்றார். கொடியாலம் ஜமீன் பெரியது. ஜமீன்தார் தேசபக்தர். ஆன்மீக நாட்டம் உள்ளவர். அவர் அப்பொழுது B.A. பாஸ் செய்த இளைஞர் ஒருவரைப் புதுவைக்கு அனுப்பி விபரம் தெரிந்து வரச் சொன்னார். அப்படி வந்த இளைஞர் வ.ரா. அவர் தேடி வந்தவர் பகவான் ஸ்ரீ அரவிந்தர். வ.ரா. புதுவை வந்து பாரதியாரை அணுகி தம் கருத்தை வெளியிட்டார். பாரதி வ.ரா.வை ஸ்ரீ அரவிந்தரிடம் அழைத்துச் சென்றார். வ.ரா. சுமார் ஒரு வருஷ காலம் பகவானுடன் தங்கியிருந்து பின்னர் சென்னை சென்றார். பின்னர் ஜமீன்தார் வந்து பகவானைத் தரிசித்துவிட்டு சிறிது காலம் புதுவையில் தங்கி ஊர் திரும்பினார். வ.ரா. பகவானைச் சந்தித்த பொழுது பகவான் சங்கரசெட்டியார் வீட்டு மாடியில் ஒரு சில நண்பர்களுடன் தங்கியிருந்தார். அன்று பாரதியைப் புதுவை முழுவதும் அறியும். பாரதி தெருவில் போனால் மக்கள் கூடி கைகூப்பி வணக்கம் செலுத்துவார்கள். பாரதி எப்பொழுதும் பாடிக் கொண்டிருப்பார். வ.ரா. வந்தவுடன் வரவேற்பு முடிந்து ஒரு பாட்டுப் பாடுவோம் என்றார். அது ஒரு பாட்டில்லை. தொடர்ந்த பாடல். பாரதியாரைப் பக்தியுடன் தேடி வருபவர் பலரில் ஓர் இளைஞர் சிறப்பானவர். அவர் பெயர் கிருஷ்ண செட்டியார். அனைவரும் வந்து பார்த்துவிட்டுப் போவார்கள். செட்டியார் மட்டும் ஒவ்வொரு சமயம் வரும் பொழுதும் ரூ.5 அல்லது ரூ.10 கொடுத்துவிட்டுப் போவார்.

வ.ரா. எழுத ஆரம்பித்த பின்னர் பெண்கள் விடுதலை, விதவை விவாகம் போன்ற புரட்சிக் கருத்துகளை எழுதினார். சிறு வயதில் விதவையான சுந்தரியின் கதையை அவர் எழுதிய தீவிரம் 1917 இல் வெளிவந்தது புரட்சிக்கனல் வீசுவதாகும்.

***பகவான் தரிசனம் புரட்சியின் நிதர்சனம்.***

❀❀❀

# ஜீவனுள்ள தொடர்பு

ஆபத்தைப் போலீஸுக்கு அறிவிக்கும் மணி எல்லா வீடுகளிலும் அமெரிக்காவில் உண்டு. திருடன், தீ விபத்து, கலவரம், எந்த ஆபத்தானாலும் போலீஸ் தேவைப்படுமானால் சுவிட்சை அழுத்திய ஏழு அல்லது எட்டு நிமிஷத்தில் போலீஸ் வந்து உதவும். Integration என்ற சொல்லை நேரடியாகத் தமிழ்ப்படுத்துவது கடினம். ஆடோமேடிக் தொழிற்சாலையில் எந்த ஒரு பகுதி நின்றாலும், பாக்டரி முழுவதும் நின்றுவிடும். அது நிறுத்துவது, எந்த ஒரு சிறு பகுதி மூலமும் பாக்டரி முழுவதும் ஓடச் செய்ய முடியும் என்ற நிலையில்லை. அப்படி உள்ள ஸ்தாபனம் Integrated organization, அனைத்தும் அனைத்துடனும் இணைந்த ஸ்தாபனமாகும். பூரண யோகம் வாழ்வை அப்படிக் கருதுகிறது. அதனால் எந்த ஒரு சிறு செயலும் ஊரையே அசைத்துச் செயல்படச் செய்ய வல்லது என்பது தத்துவம். எந்தச் செயலுக்கு அந்தத் திறனுண்டு, எந்த நிலையில் அது செயல்படும் என்பது கேள்வி. வாழ்வு அப்படி அமைந்திருப்பதால் நாம் அந்த அமைப்புடன் ஒன்றிவிட்டால் சிறு செயல் பெரும் சாதனையைச் செய்யும்.

அன்னை நினைவு, அன்னை சூழல் அந்நிலையை ஏற்படுத்தும். ஆபீஸ் பையனுக்கு ரூ.3000/- நிலுவை. அதில் சில சிறு பிரச்சனைகள் இருப்பதால் அதை அவனும் பொருட்படுத்தவில்லை. கம்பெனியும் கவனிக்கவில்லை. நிலைமை மாறியது. அந்த ரூ.3000 பாக்கியைத் தரும்படி அமைந்தது. 30 இலட்ச ரூபாய் நிலுவை உடனே கேளாமல் வந்ததைக் கவனித்த அன்பரான முதலாளி, செயல்களின் ஜீவனுள்ள தொடர்பையும், சிறு செயல் குறையானது நிவர்த்திக்கப்பட்டால் பெரும் காரியமும் நிறைவேறும் என்பதையும் கண்டார்.

இந்த உண்மையை அறிந்த மகாத்மா உப்புச் சத்தியாக்கிரகம் ஆரம்பித்தார். உடன் வேலை செய்பவர் எவரும் அதை நம்பவில்லை. சர்க்கார் பொருட்படுத்தவில்லை. உப்பு உலகை ஒரு ஆட்டம் ஆட்டிவிட்டது. ஆட்டியது உப்பில்லை,

***ஜீவனுள்ள வாழ்வின் தொடர்பு.***

❀❀❀

Vol. II Issue 5 August 2012
Malarndha Jeeviyam Postal Regn. No.TN/PMG(CCR)/114/2012-2014
Regd. with the Registrar of Newspaper for India vide Registration No. PON TAM/2011/36935
Price: Rs.5/- WPP No.45/09-11


**புதிய வெளியீடுகள்**

| | |
|---|---|
| ESSAYS ON ACCOMPLISHMENT<br>N.Asokan | ரூ.150/- |

**கர்மயோகியின்**

| | |
|---|---|
| அன்னையின் ஆன்மீகப்பரிசு | ரூ.100/- |
| லைப் டிவைன் - கருத்துகள் | ரூ.100/- |
| பரம்பொருள் III | ரூ.200/- |
| எங்கள் குடும்பம் (பாகம் 2) | ரூ.250/- |
| யோக வாழ்க்கை விளக்கம் IV | ரூ.150/- |

**சொசைட்டியின் பிற வெளியீடுகள்**

| | |
|---|---|
| லைப் டிவைன் விரிவுரைகள்<br>*தமிழாக்கம்:* என். அசோகன் | ரூ.100/- |
| SATYA JYOTHI<br>(CONCISE TRUISMS)<br>N.Asokan | ரூ.200/- |

தபாலில் பெற புத்தக விலையுடன் பதிவுத் தபால் கட்டணம் ரூ.25/- சேர்த்து M.O. செய்யவும்

**கிடைக்குமிடம்**

பாண்டியில்
மதர்ஸ் ஸர்வீஸ் சொசைட்டி,
5, புதுவை சிவம் தெரு,
வெங்கட்டா நகர் விரிவு,
புதுச்சேரி - 605 011.
✆: (0413) 2212443, 2210514

சென்னையில்
மாம்பலம் தியான மையம்,
23/1, மேற்கு சாலை,
மேற்கு C.I.T. நகர்,
சென்னை - 600 035.
✆: (044)-24347191


Vol. II Issue 5 August 2012

# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

## ஆகஸ்ட் 2012